بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 3

இதழ் 16

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

2 ஷஃபான் 1439 ஹிஜ்ரி கமரி 19 ஷஹாதத் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

19 ஏப்ரல் 2018


### அல்லாஹ்வின் கட்டளை

یٰۤاَیُّہَا الَّذِیۡنَ اٰمَنُوا اسۡتَعِیۡنُوۡا بِالصَّبۡرِ وَالصَّلٰوۃِ ؕ اِنَّ اللّٰہَ مَعَ الصّٰبِرِیۡنَ

நம்பிக்கை கொண்டவர்களே! பொறுமை, பிரார்த்தனை இவற்றின் மூலம் (அல்லாஹ்விடம்) உதவி கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்.

(அதிகாரம் அல் பக்கரா : 154)

### அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்த ஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எனது அடையாளங்கள் தோன்றாத எந்தவொரு சமுதாயமும் இல்லை. எனது அடையாளங்களுக்கு சாட்சியாக இல்லாத எந்தவொரு பிரிவும் இல்லை. இந்த அடையாளங்களுக்கு சாட்சிகளாக இருப்பவர்கள் பத்து கோடி பேர் ஆவர் என்று கூறினாலும் கூட எவ்வகையிலும் அது மிகைப்படுத்திக் கூறப்பட்டதல்ல. ஆனால், எதிரிகளின் நிலைமையின் மீது அழுகை வருகின்றது. அதாவது, அவர்கள் அவற்றிலிருந்து சிறிதளவு கூட பயனடையவில்லை. அவர்களுக்கு காட்டப்பட்ட அந்த அடையாளங்கள் மர்யமின் மகனான ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காலத்தில் யூதர்களுக்கு காட்டப்பட்டிருந்தால் அவர்கள் ضُرِبَتۡ عَلَیۡہِمُ الذِّلَّۃُ (அவர்கள் நிலையாக நிரந்தரமான இழிவிற்கு ஆளாகினர்) என்பதை மெய்ப்பிப்பவர்களாக இருந்திருக்க மாட்டார்கள். லூத்தின் சமுதாயம் இந்த அடையாளங்களைப் பார்த்திருந்தால் ஒரு பெரும் பூகம்பம் மூலம் அது பூமிக்குக் கீழே அமுக்கப்பட்டிருக்காது. ஆனால், கற்களை விடவும் மிகவும் கடினமானதாக நிரூபணமாகியுள்ள அந்த உள்ளங்கள் மீது பரிதாபமே!**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**128 -வது அடையாளம்:** *11* பிப்ரவரி *1906* -ல் வங்காளம் தொடர்பாக ஒரு முன்னறிவிப்பு செய்யப்பட்டது. அதன் சொற்கள் இவையாகும்: “முதலில் வங்காளம் தொடர்பாக என்ன கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் இப்போது அவர்களின் உள்ளம் மகிழ்விக்கப்படும்.'' இது பற்றிய விபரம் இதுவாகும். எல்லாரும் அறிந்திருப்பது போன்று அரசாங்கம் வங்காளத்தைப் பிரிப்பது தொடர்பான கட்டளையை அமலுக்குக் கொண்டு வந்திருந்தது. இந்த கட்டளை பெங்காளிகளின் உள்ளம் உடைவதற்கு எந்த அளவு காரணமாக இருந்தது என்றால், ஒரு வகையில் அவர்களின் வீடுகளில் மரணம் நிகழ்ந்தது போன்று இருந்தது. அவர்கள் வங்காளம் பிரிக்கப்படுவதைத் தடுதது நிறுத்துவது தொடர்பாக அதிகமாக முயற்சித்தனர். ஆனால், அதில் தோல்வியடைந்தனர். இன்னும் சொல்வதென்றால், அதற்கு மாற்றமாக அதன் விளைவாக அவர்களது கூச்சலையும் கொதிப்பையும் அரசாங்கத்தின் அதிகாரிகள் விரும்பவில்லை. மேலும், அவர்கள் தொடர்பாக அந்த அதிகாரிகள் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக இந்த இடத்தில் விவரித்துக் கூறுவதற்கான தேவையும் இல்லை. குறிப்பாக ஃபிலர் லஃப்டண்ட் கவர்னர் அவர்களை மரண வேளையில் வருகின்ற மலக்காக அவர்கள் கருதினர். மேலும், தற்செயலாக அந்த நாட்களில் பெங்காளி மக்கள் தமது அதிகாரிகளின் கைகளால் துன்பத்திற்கு ஆளாகிக் கொண்டிருந்தனர். மேலும் சர் ஃபிலர் அவர்களின் ஏற்பாட்டினால் அவர்கள் மரணத்திற்கு அருகில் இருந்தனர். எனக்கு இந்த இல்ஹாம் வந்தது. அதாவது, “முதலில் பெங்காளிகள் தொடர்பாக என்ன கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் இப்போது அவர்களின் உள்ளங்கள் மகிழ்விக்கப்படும்'' என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. நான் இந்த முன்னறிவிப்பை இதே நாட்களில் வெளியிட்டிருந்தேன். இந்த முன்னறிவிப்பு இவ்வாறு நிறைவேறியது. வங்காளத்தின் எந்த லஃப்டண்ட் கவர்னரின் கைகளால் பெங்காளி மக்கள் தொந்தரவுக்கு ஆளாகினரோ மேலும் அந்த கவர்னர் திடீரென்று தமது பதவியை ராஜினாமா செய்து விட்டார். அவர்களின் பெருமூச்சுக்கள் விண்ணை எட்டியிருந்தன. இதன் காரணமாக அவர் ரஜினாமா செய்திருந்தாரோ அது தொடர்பான தாள்கள் வெளியிடப்பட-வில்லை. ஆனால் ஃபிலர் அவர்களின் ராஜினாமா தொடர்பாக பெங்காளிகள் எந்த அளவு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர் என்றால், அது பெங்கால் பத்திரிகைகளிலிருந்து தெரிய வந்திருக்கின்றது. அது எல்லாவற்றிற்கும் மேலாக ஃபிலர் பதவி விலகியதில் அவர்கள் தமது உள்ளத்தில் மகிழ்ச்சியை உணர்ந்தனர் என்பதற்கு சாட்சியாக இருக்கின்றது. ஃபிலர் ராஜினாமா செய்ததன் காரணமாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் அவர்கள் நடத்திய கூட்டங்கள் பொதுவாக அவர்கள் எழுப்பிய மகிழ்ச்சியின் முழக்கங்கள் ஆகியவை உண்மையில் ஃபிலர் பதவி விலகியதில் அவர்களது உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இன்னும் சொல்வதென்றால், முழுமையான முறையில் அவர்களது உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்ற விஷயத்திற்கு சாட்சி பகர்கின்றன. அவர்கள், ஃபிலர் பதவி விலகியதை அரசாங்கம் தம் மீது செய்துள்ள பேரருளாக கருதினர். எனவே ஃபிலர் அவர்கள் எந்த நோக்கத்திற்காக ராஜினாமா செய்தாரோ அதனை அரசாங்கம் பொருத்தமான ஏதாவதொரு காரணத்திற்காக மறைத்திருந்தாலும் கூட அந்த நோக்கமானது பெங்காளிகளின் அளவில்லாத மகிழ்ச்சிகளினால் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. முன்னறிவிப்பு நிறைவேறி விட்டதற்கு இதை விட மேலாக வேறு என்ன ஆதாரம் இருக்க முடியும்? பெங்காளிகள் தமது உள்ளத்து மகிழ்ச்சியின் மூலம் இந்த நடவடிக்கையை சுயமே ஏற்றுக் கொண்டனர். மேலும், அரசாங்கத்திற்கு அளவற்ற நன்றிகளை செலுத்தினர். மேலும், எனது இந்த முன்னறிவிப்பு நமது பத்திரிகையான ரிவியூ ஆஃப் ரிலீஜியன்ஸில் மட்டும் வெளியிடப்படவில்லை. மாறாக, பஞ்சாபின் பல பத்திரிகைகளும் அதனை வெளியிட்டிருந்தன. எதுவரையென்றால், சுயமே வங்காளத்தின் சில புகழ்பெற்ற பத்திரிகைகளும் கூட இந்த முன்னறிவிப்பை வெளியிட்டிருந்தன.

இந்த முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது என்பதற்கான இன்னோர் ஆதாரம் இதுவாகும்: அதாவது, பெங்காளிகளிடையே எல்லாவற்றையும் விட அதிகமாக புகழ்பெற்றுள்ள கல்கத்தாவிலிருந்து வெளி வருகின்ற ஆங்கிலப் பத்திரிகையாக ‘அம்ரித் பாஸார் பத்ரிகா’ இவ்வாறு எழுதியிருக்கின்றது. அதன் சொற்களை லாஹூரிலிருந்து வெளி வருகின்ற ‘சிவில் என்ட் மில்ட்ரி கஸட்’ என்ற பத்திரிகை தமது *22* ஆகஸ்ட் *1906* -ன் பதிப்பில் இடம் பெறச் செய்திருக்கின்றது. அந்த சொற்கள் இவையாகும். அவரது அதாவது, ஃபிலரின் வழித்தோன்றலாக வந்திருப்பவர் (அதாவது புதிய லஃப்டன்ட் கவர்னர்) குறிப்பாக பெரும்பாலும் உள்ளத்தை மகிழ்விக்கின்ற பாலிஸியை கடைபிடிப்பார். இது முற்றிலும் நமது நோக்கத்திற்கு ஏற்பவே இருக்கின்றது.

மேற்கண்ட பத்திரிகையின் இந்த சொற்றொடரிலிருந்து இவ்விஷயம் தொடர்பாக அது கண்டிப்பாக பெங்காளிகளின் உள்ளத்தை மகிழ்வித்துக்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இஸ்லாத்தில் உயர்வான நல்லொழுக்கத்தை கடைபிடிப்பது நல்லொழுக்கத்தை வெளிப் படுத்துவது, வீட்டிலும் சமுதாயத்திலும் எல்லா மட்டத்திலும் உயர்வான நல்லொழுக்கத்தைக் காட்டுவது நம்மவர்களிடத்திலும் அந்நியர்களிடத்திலும் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்டுவது தொடர்பாக எந்த அளவு போதனைகள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ, எந்த அளவு இவ்விஷயத்தில் சிறிதிலும் சிறிதான அம்சத்தைக் கூட விடவில்லையோ அதுபோன்று வேறு எந்த ஒரு மதத்திலும் இந்த அளவு விரிவாக அதுபற்றி எடுத்துக் கூறப்படவில்லை. ஆனால், துர்பாக்கிய நிலை என்னவென்றால், பொதுவாக முஸ்லிம்கள் தான் இவ்வகையில் மிகவும் கீழ்த்தரத்தில் உள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது செயலாலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது உம்மத்திற்கு மீண்டும் மீண்டும் நல்லொழுக்கத்தின் உயர்வான தரத்தை அடைவது குறித்தும் வலியுறுத்தியும் கூறியுள்ளார்கள். முஸ்லிம்கள் பொதுவாக ரஸூலின் மீது தங்களுக்கு அன்பு இருப்பதாக வாதம் செய்கின்றனர். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றுகள் மற்றும் நடைமுறைக்கேற்ப அறவே அவர்கள் செயல்படவில்லை. முஸ்லிம்களின் இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டவாறே அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை அனுப்பினான். ஆனால், இதன் பக்கமும் இந்த மக்கள் கவனம் செலுத்த மறுத்து விடுகின்றனர்.

இவர்களின் இந்த நிலைமை அஹ்மதிகளாகிய நமக்கு நாம் நமது எல்லா விதமான முயற்சிகளுடன் உயர்வான நல்லொழுக்கத்தைப் பேணுவதற்கு முயற்சி செய்வதன் பக்கம் கவனமூட்டக் கூடியதாக இருக்க வேண்டும். நாம் நமது எல்லா வகையான தகுதிகளையும் பயன்படுத்தியவாறு உயர்வான நல்லொழுக்கத்தைக் கடைபிடிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதுவே இஸ்லாத்தின் போதனையாக இருக்கின்றது. ஏதாவதொரு வகையில் இது தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்கள் போதனை செய்துள்ளார்கள். இதன் முன்மாதிரியை பெருமானார் (ஸல்) அவர்கள் செயலால் நமக்கு முன்னால் நிலைநாட்டியுள்ளார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் சில அடிப்படை நல்லொழுக்கங்கள் தொடர்பான போதனைகளையும் பெருமானார் (ஸல்) அவர்களின் உயர்வான நல்லொழுக்கத்தின் தூய முன்மாதிரிகளையும் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் நல்லொழுக்கம் என்பதற்கான விளக்கத்தையும் பல்வேறு நல்லொழுக்கங்களை கடைபிடிப்பது தொடர்பான அறிவுரைகளையும் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

கராச்சியிலுள்ள Defence Society ஹல்காவைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஷேக் அப்துல் ஹமீது சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய ஷேக் அப்துல் மஜீது சாஹிப் அவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள். மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**

**2 மார்ச் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **2 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ ـ الرَّحْمٰنِ الرَّحِيمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّينِ ـ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِينُ ـ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ـ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ـ

இஸ்லாத்தில் உயர்வான நல்லொழுக்கத்தை கடைபிடிப்பது நல்லொழுக்கத்தை வெளிப் படுத்துவது, வீட்டிலும் சமுதாயத்திலும் எல்லா மட்டத்திலும் உயர்வான நல்லொழுக்கத்தைக் காட்டுவது நம்மவர்களிடத்திலும் அந்நியர்களிடத்திலும் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்டுவது தொடர்பாக எந்த அளவு போதனைகள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ, எந்த அளவு இவ்விஷயத்தில் சிறிதிலும் சிறிதான அம்சத்தைக் கூட விடவில்லையோ அதுபோன்று வேறு எந்த ஒரு மதத்திலும் இந்த அளவு விரிவாக அதுபற்றி எடுத்துக் கூறப்படவில்லை. ஆனால், துர்பாக்கிய நிலை என்னவென்றால், பொதுவாக முஸ்லிம்கள் தான் இவ்வகையில் மிகவும் கீழ்த்தரத்தில் உள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர். முஸ்லிம் அல்லாதவர்கள் அவர்களை நோக்கி விரலை உயர்த்தி ஆட்சேபனை செய்கின்றனர். ஏனென்றால், அவர்களது செயல் அவர்கள் கூறுவதற்கு மாற்றமானதாக இருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது செயலாலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது உம்மத்திற்கு மீண்டும் மீண்டும் நல்லொழுக்கத்தின் உயர்வான தரத்தை அடைவது குறித்தும் வலியுறுத்தியும் கூறியுள்ளார்கள். முஸ்லிம்கள் பொதுவாக ரஸூலின் மீது தங்களுக்கு அன்பு இருப்பதாக வாதம் செய்கின்றனர். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றுகள் மற்றும் நடைமுறைக்கேற்ப அறவே அவர்கள் செயல்படவில்லை. முஸ்லிம்களின் இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டவாறே அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை அனுப்பினான். ஆனால், இதன் பக்கமும் இந்த மக்கள் கவனம் செலுத்த மறுத்து விடுகின்றனர்.

இன்னும் சொல்வதென்றால், சில மக்கள் நம்மை எதிர்ப்பதில் சில இடங்களில் சில நாடுகளின் அதன் உச்சத்தை அடைந்திருக்கின்றனர். சாதாரண நல்லொழுக்கத்திலிருந்து விலகி இன்னும் சொல்வதென்றால் நல்லொழுக்கத்தை முற்றிலும் கைவிட்ட நிலையில் ஒரு நபர் எந்த அளவு தரக்குறைவாக நடந்து கொள்வாரோ அவ்வாறு செயல்பட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மற்றும் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்கள் தொடர்பாக மிகவும் தரக்குறைவான அசுத்தமான வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனர். உலகில் எல்லா இடங்களிலும் அதன் விளைவையும் அவர்கள் சுவைத்து வருகின்றனர்.

ஏற்கெனவே நான் கூறியது போன்று முஸ்லிம் அல்லாதவர்கள் இவர்களை நோக்கி விரலை உயர்த்தி ஆட்சேபனை செய்கின்றனர். இவர்களின் இந்த நிலைமை அஹ்மதிகளாகிய நமக்கு நாம் நமது எல்லா விதமான முயற்சிகளுடன் உயர்வான நல்லொழுக்கத்தைப் பேணுவதற்கு முயற்சி செய்வதன் பக்கம் கவனமூட்டக் கூடியதாக இருக்க வேண்டும். நாம் நமது எல்லா வகையான தகுதிகளையும் பயன்படுத்தியவாறு உயர்வான நல்லொழுக்கத்தைக் கடைபிடிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதுவே இஸ்லாத்தின் போதனையாக இருக்கின்றது. ஏதாவதொரு வகையில் இது தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்கள் போதனை செய்துள்ளார்கள். இதன் முன்மாதிரியை பெருமானார் (ஸல்) அவர்கள் செயலால் நமக்கு முன்னால் நிலைநாட்டியுள்ளார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை நாம் பார்க்கின்றபோது வியக்கத்தக்க தரம் அதில் நமக்கு தென்படுகிறது. பெருமானார் (ஸல்) அவர்களது குடும்ப நிலைமைகளை நாம் பார்க்கும்போது ஒருமுறை அன்னாரது ஒரு மனைவி, அன்னாரது இன்னொரு மனைவி குள்ளமாக இருப்பதைப் பார்த்து கிண்டல் செய்தபோது கடுமையாக தனது வெறுப்பை வெளிப்படுத்தினார்கள். உணர்வு ரீதியாக எவருக்கும் துன்பம் கொடுக்கக் கூடாது என்பதை அன்னார் புரிய வைத்தார்கள். (சுனன் அபீ தாவூது கிதாபுல் அதப் பாபு ஃபில் கீபதி ஹதீஸ் 4878) பிரிதொரு சந்தர்ப்பத்தில் தனது ஒரு மனைவியிடம் தனது இன்னொரு மனைவியின் ஒரு பணி தொடர்பாக சாதாரணமான வெறுப்பைக் கூட வெளிப்படுத்தக் கூடாது என்பதைப் புரிய வைத்தார்கள். (சுனன் இப்னி மாஜா கிதாபுல் அஹ்காமி பாபுல் ஹுக்மீ ஃபீ மன் கஸா ஷய்அன் ஹதீஸ் 2333) சில நேரங்களில் குழந்தைகளில் நல்லொழுக்கத்தை உயர்த்துவது தொடர்பாக அவர்கள் அறிவுரை கூறினார்கள். அதாவது, மக்களது பழம் தரும் மரங்கள் மீது கல்லெறிந்து அவற்றிலுள்ள

பழுக்காத பழங்களை வீணாக்கி விடாதீர்கள் என்று ஒரு சிறுவனிடம் அன்னார் கூறினார்கள். உனக்கு அதிகமாக பசிக்கின்றது என்றால் அதை உன்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்றால் மரத்திற்கு கீழே விழுந்து கிடக்கின்ற பழுத்த பேரீத்தம் பழங்களை சாப்பிடு என்று அந்த சிறுவனிடம் அன்னார் கூறினார்கள். ஆனால் அத்துடன் எல்லாவற்றையும் விட சிறந்த விஷயம் என்னவென்றால், உனக்கு அத்தகைய நிலைமை வராமல் இருக்க வேண்டும் என்பதற்காக நான் துஆ செய்கின்றேன். அதாவது கீழேயிருந்து பேரித்தம் பழங்களை எடுத்து சாப்பிடுகின்ற அத்தகைய நிலைமை கூட உமக்கு வராமல் இருக்க நான் துஆ செய்கின்றேன் என்று அவனுக்கு அறிவுரை வழங்கினார்கள். நீ எவ்வித நிர்பந்தமான சூழ்நிலைக்கும் ஆளாகி விட வேண்டாம். அல்லாஹ் உனக்காக இதற்கான ஏற்பாட்டை செய்து கொண்டே இருப்பானாக என்று அன்னார் அவனுக்காக துஆ செய்தார்கள். (சுனன் இப்னி மாஜா கிதாபுல் ஜிஹாதி பாபு மன் கால இன்னஹு யஃகுலு மிம்மா சகித ஹதீஸ் 2622) இந்த துஆவுடன் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த சிறுவனுக்கு உனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அல்லாஹ்வின் பக்கம் திரும்பு –வாயாக என்று அவனுக்கு கவனமூட்டினார்கள். அது அல்லாமல் தவறான வழிமுறையைக் கடைபிடித்தவாறு மக்களது பொருளை எடுக்கக் கூடாது என்று கவனமூட்டினார்கள். சில நேரங்களில் நிர்பந்தமான சூழ்நிலையில் இவ்வாறு கீழே கிடக்கும் பொருள்களை எடுப்பது ஆகுமானதாக ஆகி விடுகின்றது என்றாலும், நீ உயர்வான நல்லொழுக்கத்தைக் கடைபிடிப்பாயாக. இதுவே நன்மையாகும் என்று அன்னார் அந்த சிறுவனிடம் கூறினார்கள்.

பிறகு இன்னொரு சிறுவன் வேகமாக சாப்பிட்டதன் காரணமாகவும் அல்லது அவனது கை உணவுத் தட்டு அல்லது பாத்திரத்தில் இங்கும் அங்கும் உழன்று கொண்டிருப்பதன் காரணமாக –வும் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த சிறுவனிடம் முதலில் பிஸ்மில்லாஹ் என்று ஓதுவாயாக. உனது வலக்கையால் சாப்பிடுவாயாக. உனக்கு முன்னால் இருந்து சாப்பிடுவாயாக என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுல் அதத்இமதி பாபுத் தஸமியதி அல்த்தஆமி ஹதீஸ் 5376) எனவே, அதன் மூலமாக அவர்கள் பெரியவர்கள் ஆகும் போது அவர்களிடம் உயர்வான நல்லொழுக்கம் உருவாகும்.

பிறகு, பொய் ஒரு பாவமாகும். மேலும் உண்மை ஒரு நன்மையும் நல்லொழுக்கமுமாகும். இதனை சிறு வயதிலிருந்தே குழந்தைகளின் உள்ளங்களில் நிலைபெறச் செய்வதற்காக அவர்கள் இவ்வாறு போதனை செய்தார்கள். ஒரு நபித்தோழர் தமது சிறு வயதில் நடந்த சம்பவத்தை அறிவிக்கின்றார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். நான் எனது சிறுபிள்ளைத் –தனத்தின் காரணமாக சிறிது நேரம் கழிந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் இருக்கும்போதே வீட்டிலிருந்து வெளியே விளையாடுவதற்காக செல்ல ஆரம்பித்தேன். அப்போது எனது தாயார் இந்த அருளுக்குரிய சுற்றுச் சூழலிருந்து விலகி நான் தொலைவில் செல்வதைத் தடுப்பதற்காக என்னிடம் நீ இங்கே வா. இப்போது இங்கேயே இருந்து விடு. நான் உனக்கு ஒரு பொருளை தருவேன் என்று கூறினார். அதை கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், நீ அவனுக்கு எதையாவது கொடுக்க விரும்புகின்றாயா? என்று கேட்டார்கள். அதற்கு எனது தாயார் ஆம்! நான் அவனுக்கு ஓர் பேரித்தம் பழத்தை கொடுப்பேன் என்று கூறினார்கள். அதை கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், உனக்கு இந்த எண்ணம் இல்லாமல் இருந்திருந்தால் உனது குழந்தையை அழைப்பதற்காக மட்டும் இதனை நீ கூறியிருந்தால் பிறகு நீ பொய் கூறுகின்ற பாவத்தைச் செய்தவனாக ஆகி விடுவாய் என்று கூறினார்கள். (சுனன் அபீ தாவூது கிதாபுல் அதப் பாபு ஃபித்தஸ்தீதி ஃபில் இஸ்பி ஹதீஸ் 4991) இப்போது இந்த சிறுவனுக்கு கூட இந்த சிறிய வயதில் உண்மையின் முக்கியத்துவம் மற்றும் பொய்யின் மீது காட்ட வேண்டிய வெறுப்பு மிகத் தெளிவாகத் தெரிந்து விட்டது. தான் பெரியவராக ஆகும் வரை அவர்கள் இந்த விஷயத்தை நினைவில் வைத்திருந்தார்கள். அதனை அவர்கள் அறிவிக்கவும் செய்தார்கள். அதற்குப் பிறகு அந்த விஷயத்திற்கு எனது உள்ளத்தில் இந்த அளவு முக்கியத்துவம் இருந்தது என்று கூறினார்கள்.

ஒருமுறை அன்னார் ஒரு நபரிடம் நீங்கள் எல்லா தீமைகளையும் விட்டு விட முடியாமல் இருந்தாலும் கூட பொய் சொல்வதை மட்டும் விட்டு விடுங்கள். குறைந்தபட்சம் ஒரு தீமையை விட்டு விடுங்கள் என்று கூறினார்கள். (தஃப்ஸீரே கபீர். இமாம் ராஸி தொகுதி 8 பாகம் 16 பக்கம் 176 தஃப்ஸீர் சூரா தவ்பா) இப்போது நாம் பார்க்கின்றோம். இன்றைய முஸ்லிம்களின் தரம் இவ்வாறானதாக இருக்கின்றதா என்ன? எந்த அளவு நுட்பத்துடன் பொய்யிலிருந்து தவிர்ந்திருந்து உண்மையை நிலைநாட்ட வேண்டியது உள்ளது? என்பதைப் பாருங்கள். இன்னும் சொல்வதென்றால், நாம் நம்மையும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நமது தரம் இப்படிப்பட்டதாக இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: பெருமானார் (ஸல்) அவர்கள் பெரும் பாவங்களைப் பற்றிக் கூறியவாறு, பெரும் பாவங்கள் இவையாகும். அதாவது, அல்லாஹ்வுக்கு இணை வைப்பது, பெற்றோர்களுக்கு கீழ்ப்படியாமல் இருப்பது பெரும் பாவங்களாகும் என்று அன்னார் கூறினார்கள்.

பிறகு அறிவிப்பாளர் கூறுகின்றார். பெருமானார் (ஸல்) அவர்கள் சாய்ந்து அமர்ந்தவாறு இவ்விஷயங்களைக் கூறிக் கொண்டிருந்தார்கள். அந்நிலையில் அவர்கள் எழுந்து அமர்ந்தார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கவனமாகக் கேளுங்கள். பிறகு பெரும் பாவம் பொய் கூறுவதும் பொய் சாட்சி கூறுவதுமாகும் என்று கூறினார்கள். பிறகு மீண்டும் பொய் கூறுவதும் பொய் சாட்சி கூறுவதும் பெரும் பாவமாகும் என்று கூறினார்கள். பிறகு மீண்டும் மீண்டும் அதையே கூறிக் கொண்டிருந்தார்கள். அறிவிப்பாளர் கூறுகின்றார்: அன்னார் மீணடும் மீண்டும் இதனை கூறிக் கொண்டே இருந்தார்கள். அந்தோ! பெருமானார் (ஸல்) அவர்கள் இப்போது அமைதியாக இருக்க வேண்டுமே! என்று நாங்கள் விரும்பினோம். (சஹீஹ் புகாரி கிதாபுல் அதப் பாபு ஹுக்குல் வாலிதைன் மினல் கபாயி ஹதீஸ் 5976) பிறகு இவ்வாறும் பெருமானார் (ஸல்) அவர்கள் தமது நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தி இருப்பதைப் பார்க்கின்றோம். அன்னாரிடம் சகிப்புத்தன்மை மற்றும் பொறுமையின் எத்தகைய தரம் இருந்தது? இதுபற்றி எவ்வாறு அவர்கள் அறிவுரை கூறியுள்ளார்கள்? என்பதை பார்க்கின்றோம்.

ஒரு காட்டரபி பள்ளிவாயிலில் சிறுநீர் கழிக்க ஆரம்பித்தார். மக்கள் அவரை தடுப்பதற்காக அவர் பக்கம் ஓடினர். பெருமானார் (ஸல்) அவர்கள் அவரை விட்டு விடுங்கள். எந்த இடத்தில் அவர் சிறுநீர் கழித்துள்ளாரோ அங்கு தண்ணீரை ஊற்றி விடுங்கள் என்று கூறினார்கள். பிறகு நபி (ஸல்) அவர்கள் நீங்கள் மக்களுக்கு எளிதான நிலைமையை ஏற்படுத்துவதற்காக படைக்கப் –பட்டுள்ளீர்கள். அது அல்லாமல் அவர்களுக்கு கஷ்டத்தைக் கொடுப்பதற்காக அல்ல என்று கூறினார்கள். இதனால் அந்த காட்டரபி எப்போதும் பெருமானார் (ஸல்) அவர்களின் பரிவைப் பற்றி கூறிக் கொண்டே இருந்தார். (சுனன் திர்மிதி அப்வாபுத் தஹாரதி பாபு ஜாஅஃபில் பவ்லி யுஸீபுல் அர்ழ் ஹதீஸ் 147)

இன்றைய நாட்களில் முஸ்லிம் அரசுகளும் ஆலிம்களும் முஸ்லிம் பிரிவுகளும் உலகில் கஷ்டத்தை உருவாக்குவதிலேயே முன்னேறிச் செல்கின்றனர். சிறு விஷயத்திலும் எளிதான நிலைமையை உருவாக்குபவர்களாக அவர்கள் இல்லை. அவ்வாறே பெரிய விஷயத்திலும் எளிதான நிலைமையை உருவாக்குபவர்களாக அவர்கள் இல்லை.

ஒரு சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் தீயதைச் செய்கின்றீர்களா? அல்லது நல்லதைச் செய்கின்றீர்களா? என்பதை நீங்கள் அறிந்து கொள்ள விரும்பினால், நீங்கள் உங்களது அண்டை வீட்டுக்காரரின் பக்கம் பாருங்கள். அதாவது அவர் உங்களைப் பற்றி என்ன கருத்தை உடையவராக இருக்கின்றார்? என்று பாருங்கள் என்று கூறினார்கள். (சுனன் இப்னி மாஜா கிதாபுஸ் ஸஹுது பாபு ஸனாயில் ஹுஸ்னி ஹதீஸ் 4222) பிறகு அதிகாரிகளைப் பார்த்து உங்களது உயர்வான நல்லொழுக்கம் பற்றி உங்களை நீங்களே சமுதாயத்தின் தொண்டராகக் கருதும்போதுதான் தெரிய வரும். மேலும் உங்களது எல்லா வித தகுதிகளையும் பயன்படுத்தியவாறு பொதுமக்களுக்கு நீங்கள் தொண்டு செய்யும் போதுதான் உங்களது நல்லொழுக்கம் பற்றி தெரிய வரும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (கன்ஸுல் உம்மால் தொகுதி 6 பக்கம் 10 ஹதீஸ் எண்: 17517) நமது தலைவர்களிடமும் நமது அதிகாரிகளிடமும் இந்த தரம் எங்கே தென்படுகின்றது? ஜமாஅத் பொறுப்பாளர்களும் இவ்விஷயத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். பிறகு எல்லா ஆற்றல்களும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது. அரபு நாட்டை அவர்கள் வெற்றி கொண்டபோது அன்னாரது நல்லொழுக்கத்தின் தரம் எவ்வாறு இருந்தது என்பதை நாம் பார்க்கின்றோம். மக்கா வெற்றியின்போது உயர்வான நல்லொழுக்கத்தை எவ்வாறு அன்னார் வெளிப்படுத்திக் காட்டினார் –கள். பகைவர்களைக் கூட அன்னார் மன்னித்து விட்டார்கள். அந்த பகைவர்கள் உயிரின் பகைவர்களாக இருந்தவர்கள் ஆவர். அவர்கள்

தொடர்ந்து அன்னாருக்கு துன்பங்களைக் கொடுத்து வந்தார்கள். பிறகு அன்னாரது இந்த மன்னிப்பு அவர்களில் பலரும் இஸ்லாத்தைத் தழுவுவதற்குக் காரணமாக ஆகி விட்டது.

பெருமானார் (ஸல்) அவர்களின் உயர்வான நல்லொழுக்கத்தின் தரம் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: அல்லாஹ் ஜல்ல ஸானஹு நமது நபி கரீம் (ஸல்) அவர்களை நோக்கி இன்னக்க லஅலா குலுக்கின் அளீம். அதாவது, நீர் உயர்வான நல்லொழுக்கத்தில் நிலைபெற்றுள்ளீர் என்று கூறுகின்றான். எனவே, இந்த விளக்கத்திற்கு ஏற்ப இதன் பொருள் இதுவாகும். அதாவது நல்லொழுக்கத்தை எல்லா வகைகளும் அதாவது ஈகைக் குணம், வீரம், நீதி, கருணை, பேருபகாரம், உண்மை மற்றும் பொறுமை போன்றவை (அதாவது பொறுமையுடன் ஏதாவது ஒரு விஷயத்தை சகித்துக் கொள்வது) ஆகியவை உம்மிடம் ஒன்று சேர்ந்துள்ளன.

சுருக்கமாக, மனிதனின் உள்ளத்தில் எந்த அளவு ஆற்றல்கள் இருக்கின்றனவோ உதாரணமாக மரியாதை, வெட்கம், நேர்மை, பரிவு, தன்மான உணர்வு, கொள்கையில் உறுதியாக நிலை நிற்றல், கற்புடைமை, சாட்சி கூறுவது, நடுநிலையைப் பேணுவது, அனுதாபம் காட்டுவது போன்றவையும் அவ்வாறே வீரம், ஈகைக் குணம், மன்னிக்கும் தன்மை, பொறுமை, நன்மை செய்தல், உண்மை, நன்றியுணர்வு போன்ற அனைத்தும் தமது இயல்பான நிலைமைகளில் அறிவு மற்றும் சிந்தனையின் ஆலோசனையைப் பெற்று தத்தமது இடங்களில் மற்றும் சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்திக் காட்டப்படும்போது அவை அனைத்திற்கும் உரிய பெயரே அஃலாக் அதாவது நல்லொழுக்கம் என்பதாகும். இந்த எல்லா நல்லொழுக்கங்களும் மனிதனின் இயல்பான நிலைமைகள் மற்றும் இயல்பான உணர்வுகளே ஆகும். அவற்றை சரியான இடத்திலும் பொருத்தமான சந்தர்ப்பத்திலும் தனது எண்ணத்திற்கேற்ப பயன்படுத்தும் சமயத்தில் மட்டுமே அவை நல்லொழுக்கம் என்று அழைக்கப்படுகின்றது. (இஸ்லாமி உஸூல் கி ஃபிலாஸபி. ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 333) பழக்கம் என்ற நிலையில் அல்லாமல் அந்த நல்லொழுக்கங்கள் மூலமாக நல் விளைவுகள் ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தில் அவற்றை பயன்படுத்த வேண்டும். சிலருக்கு தண்டனை வழங்க வேண்டியது வந்தால் தண்டனையின் காரணமாக நல் விளைவுகள் ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தில் தண்டனை வழங்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உயர்வான நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவது தொடர்பான பல்வேறு நிலைமைகளைப் பற்றிக் குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: உயர்வான நல்லொழுக்கம் பற்றி இரண்டு நிலைமைகளில் நமக்கு தெரிய வருகின்றது. ஒன்று, சோதனைகள் மற்றும் கஷ்டங்களின் நிலைமையில் அது தெரிய வருகின்றது. அடுத்து வெகுமதிகள் கிடைக்கின்ற மற்றும் வசதியாக நிலைமையிலும் அது தெரிய வருகிறது. சோதனைகள் மற்றும் கஷ்டங்களின்போது பொறுமையைக் கடைபிடித்து அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெரும் வகையில் உள்ள முன்மாதிரியைக் காட்டுபவர் உயர்வான நல்லொழுக்கத்தின் எஜமானராக இருக்கின்றார். அவ்வாறே வெகுமதிகள் கிடைக்கும்போது ஆட்சி கிடைக்கும்போது பணிவையும், நீதியையும் நிலைநாட்டுபவர் உயர்வான நல்லொழுக்கம் உள்ளவர் என்று அழைக்கப்படலாம். இந்த இரண்டு நிலைமைகளும் நமது நபி கரீம் (ஸல்) அவர்களிடம் ஒளிமயமாக வெளிப்பட்டிருக்கின்றது. மக்கா வெற்றியின்போது எவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்கள் தமது உயிரின் பகைவர்களாக இருந்தவர்களைக் கூட மன்னித்தார்கள் என்பதை நான் முதலில் கூறியிருந்தேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: மனிதனின் நல்லொழுக்கம் எப்போதும் இரண்டு வகையில் வெளிப்பட முடியும். ஒன்று, சோதனையின் நிலைமையில் அல்லது வெகுமதிகள் கிடைக்கும் நிலைமையில் அவை வெளிப்படும். ஓர் அம்சம் மட்டும் இருந்து இரண்டாவது அம்சம் இல்லாமல் இருந்தால் பிறகு நல்லொழுக்கத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள முடியாது. இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தை முழுமைப்படுத்த வேண்டியது இருந்ததால் அவர்களது வாழ்வின் சில பகுதிகள் மக்காவிலும் சில பகுதிகள் மதீனாவிலும் கழிந்தன. மக்காவிலிருந்த எதிரிகள் பெரும் பெரும் துன்பங்களை அன்னாருக்கு கொடுத்த போது அவர்கள் பொறுமையின் முன்மாதிரியைக் காட்டினார்கள். இம்மக்கள் மிகவும் கடுமையாக அன்னாரிடம் நடந்து கொண்ட பிறகும் கூட அன்னார் அவர்களிடம் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொண்டார்கள். இறைவனிடமிருந்து அவர்கள் கொண்டு வந்த தூதுச் செய்தியை மற்றவர்களுக்கு எட்ட வைப்பதில் அவர்கள் கவனமற்றவர்களாக இருக்கவில்லை. பிறகு, மதீனாவில் அவர்களுக்கு மேலான நிலைமை கிடைத்தபோது அதே எதிரிகள் கைது செய்யப்பட்டு அன்னாருக்கு முன்னால் நிறுத்தப்பட்டபோது அவர்களில் பெரும்பாலாரை அன்னார் மன்னித்து விட்டார்கள். பழிவாங்குவதற்கான ஆற்றல் அவர்களிடம் இருந்தும்கூட அவர்கள் பழிவாங்கவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 195-196; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம் பற்றி மேலும் குறிப்பிட்டவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இந்த விஷயங்களை மிகவும் கவனமாகக் கேட்க வேண்டும். பெரும்பாலான மக்களை நான் பார்த்துள்ளேன். கவனமாக அவர்களைப் பற்றி ஆய்வு செய்துள்ளேன். சிலர் தாராளமாக வழங்குகின்றனர். பெரும் வள்ளலாக இருக்கின்றனர். மக்களுக்கு வழங்கக்கூடியவர்களாக இருக்கின்றனர். ஆனால், அத்துடன் கோபப்படுபவர்களாகவும் இருக்கின்றனர். சிறு சிறு விஷயங்களின் அவர்கள் வெறுப்படைந்து விடுகின்றனர். எவருக்காவது எதையாவது வழங்கினால் பிறகு அவரிடம் வெறுப்படையும் போது தனது பேருபகாரத்தை வெளிப்படுத்திக் கூறவும் செய்கின்றனர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சிலர் சகிப்புத் தன்மை உடைபவர்களாக இருந்தும், அவர்கள் கருமிகளாக இருக்கின்றனர். சிலர் கோபமும் ஆத்திரமும் வருகின்ற நிலைமையில் தடியால் அடித்து அடித்து பிறரை, தான் கூறுவதை ஏற்றுக் கொள்ள வைக்கின்றனர். ஆனால் பணிவும் தாழ்மைக் குணமும் பெயருக்கு கூட அவர்களிடம் இருப்பதில்லை. சிலரிடம் பணிவும் தாழ்மைக் குணமும் அவர்களிடம் மிகவும் உயர்ந்த தரத்தில் இருப்பதை நாம் பார்க்கின்றோம். ஆனால், அவர்களிடம் வீரம் இருப்பதில்லை. பணிவு இருந்தாலும் வீரம் இருப்பதில்லை. ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் சின்ன விஷயத்திற்காக கூட அவர்கள் கோழைத்தனத்தை வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றனார்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு மனிதனும் எல்லா நற்பண்புகளையும் ஒருங்கே பெற்றவராக இருக்க முடியாது என்பது சரிதான். ஆனால், அத்துடன் அவன் முற்றிலும் இழப்பிற்குரியவனாகவும் இருக்க கூடாது.

ஹுஸூர் (அலை) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றி குறிப்பிட்டுக் கூறியவாறு கூறினார்கள்: இந்த நல்லொழுக்கங்கள் தொடர்பான எல்லாவற்றையும் விட முழுமையான நிகரற்ற முன்மாதிரி பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியாகும். அவர்கள் முழுமையான நல்லொழுக்கத்தை உடையவராக இருந்தார்கள். எனவேதான் அவர்களைப் பற்றி இன்னக்க லஅலா குலுக்கின் அளீம் என்று அல்லாஹ் கூறினான். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 132-133; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, துன்பங்களின் காலக்கட்டம் வந்தபோதும் அவர்கள்

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

நல்லொழுக்கத்தைக் காட்டினார்கள். எத்தகைய பொறுமையை அன்னார் வெளிப்படுத்திக் காட்டினார்கள் என்றால் அதைப் பார்த்த உலகமே வியப்பில் ஆழ்ந்து விட்டது. முழு அரபு நாட்டின் ஆட்சியும் அன்னாருக்கு கிடைத்தபோது அவர்கள் அநீதியிழைத்த அனைவரையும் மன்னித்து விட்டார்கள். எனவே, நல்லொழுக்கத்தின் உயர்வான தரத்தை எல்லா நிலையிலும் பெருமானார் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ள ஒவ்வோர் உண்மையான முஸ்லிமும் எப்போதும் தன் முன்னால் வைத்திருக்க வேண்டும். அவற்றை வெளிப்படுத்திக் காட்டவும் வேண்டும்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு எவ்வாறு வழிகாட்டியுள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்: இந்த உயர்வான நல்லொழுக்கம் எத்தகையது என்றால் அது மக்களை தன் பக்கம் ஈர்த்துக் கொண்டு வந்து விட்டது. மேலும் அது ஓர் அற்புதத்தையும் காட்டியது.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: நீங்கள் இந்த நடைமுறையைப் பின்பற்றி நடந்தவாறு உங்களது ஒழுக்கத்தை நல்லதாக ஆக்கிக் கொண்டால், ஒவ்வொரு நல்லொழுக்கத்தையும் அதற்கேற்ற இடம் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பயன்படுத்தினால் நீங்கள் அற்புதங்களைக் காட்டுபவராக ஆக முடியும்.

அன்னார் கூறுகின்றார்கள்: வழக்கத்திற்கு அப்பாற்பட்ட அடையாளங்கள் பற்றி மக்கள் ஏதாவதொரு வகையில் சாக்குப்போக்குகளைக் கூறி விடுகின்றனர். அவற்றை அவர்கள் தட்டிக் கழிக்க விரும்புகின்றனர். ஆனால், நல்லொழுக்க நிலைமையானது எத்தகைய ஓர் அற்புதம் என்றால், அதற்கு எதிராக ஆட்சேபனை செய்தவாறு எவரும் விரலை உயர்த்த முடியாது. இதன் காரணமாகவே நமது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எல்லாவற்றையும் விட பெரிய வலுவான அற்புதமான நல்லொழுக்கமே வழங்கப்பட்டிருக்கின்றது. அதைப் பற்றியே இறைவன் இன்னக்க லஅலா குலுக்கின் அளீம் என்று கூறியுள்ளான்.

அன்னார் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் மூலமாக வெளிப்பட்ட வழக்கத்திற்கு அப்பாற்பட்ட ஒவ்வோர் அடையாளமும் ஆதாரத்தின் ஆற்றலின் அடிப்படையில் எல்லா நபிமார்களின் அற்புதங்களை விட சுயமே பெரிதாக இருந்தாலும் பெருமானார் (ஸல்) அவர்கள் காட்டிய நல்லொழுக்கத்தின் அற்புதமானது அவை எல்லாவற்றையும் விட முதலிடத்தில் இருக்கின்றது. அதற்கு நிகரான ஒன்றை உலகத்தின் வரலாறால் எடுத்துக் கூற முடியவில்லை. இனியும் எடுத்துக் கூற முடியாது.


ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு நபரும் தமது தீய ஒழுக்கத்தை கை விட்டு விட்டு தீய பழக்கங்களை கை விட்டு விட்டு அழகிய நல்லொழுக்கங்களை தன்னிடம் உருவாக்கிக் கொள்வாரோ அவருக்கு அதுதான் அற்புதமாகத் திகழும். இவ்வாறு செய்தால் இது மிகப்பெரும் அற்புதமாகும். அதாவது தீய ஒழுக்கங்களை கை விட்டு விட்டு நன்மைகளை தங்களிடம் உருவாக்க வேண்டும். உதாரணமாக, மிகவும் கடுமையான முரட்டு சுபாவத்தை உடைய ஒருவர் மற்றும் கோபப்படுபவர் தமது இந்த பழக்கங்களை கை விட்டு விட்டு சகிப்புத் தன்மையையும் மன்னிக்கும் தன்மையையும் கடைபிடிக்கின்றாரோ அல்லது கருமித்தனத்தை கை விட்டு விட்டு எல்லாவற்றையும் தன்னிடமே தடுத்து வைத்து கொள்வதற்குப் பகரமாக தாராளமாக அவற்றை பிறருக்கு வழங்குகின்றாரோ அல்லது பொறாமைப்படுவதற்கு பகரமாக பிறரிடம் அனுதாபத்துடன் நடந்து கொள்கின்றாரோ அந்நிலையில் சந்தேகமின்றி அதுவே பெரும் அற்புதமாகும். இத்தகைய மாற்றம் ஏற்பட்டு விட்டால் பிறகு அதனால் அற்புதம் நிகழ்கின்றது. பிறகு அது தன் விளைவுகளையும் காட்டுகின்றது.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: அவ்வாறே சுயமாக புகழப்படுவதையும் சுய நலத்தையும் விட்டு விட்டு அவர் பணிவையும் தாழ்மைக் குணத்தையும் கடைபிடிக்கும்போது இந்த தாழ்மைக் குணமே அற்புதமாக இருக்கின்றது. தான் பிறர் மூலம் புகழப்படுவதையும் தன்னை பெரிதாக வெளிப்படுத்திக் காட்டுவதையும் விட்டு விட்டு பணிவை கடைபிடித்தால் இது அற்புதமாக ஆகி விடும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அற்புதங்களை நிகழ்த்திக் காட்டுபவராக ஆகுவதை உங்களில் யார்தான் விரும்பாமல் இருப்பார்? ஒவ்வொருவரும் இதைத்தான் விரும்புகின்றார் என்பதை நான் அறிவேன். எனவே, இது நிரந்தரமாக இருக்கின்ற உயிருள்ள அற்புதமாகும். மனிதன் நல்லொழுக்கத்தின் நிலையை சரி செய்தால் பிறகு அது எத்தகைய அற்புதமாக இருக்குமென்றால் அதன் தாக்கம் ஒருபோதும் அழிந்து விடாது. மாறாக, அதன் பயன் தொலை தூரம் வரை சென்று சேர்கின்றது. எனவே, நம்பிக்கை கொண்டவர், படைக்கப்பட்டவர்கள் மற்றும் படைத்தவன் ஆகியோரின் பார்வையில் அற்புதங்களை உடையவராக ஆகி விட வேண்டும். உல்லாசமாக இருந்த பலரும் வழக்கத்திற்கு அப்பாற்றப்பட்டதாக இருந்த எந்தவோர் அடையாளத்தையும் ஏற்றுக் கொள்ளமால் இருந்ததை நாம் பார்க்கின்றோம். ஆனால் நல்லொழுக்கத்தின் நிலைமையைப் பார்த்து அவர்களும் கூட தலை குனிந்து விட்டனர். அவற்றை ஏற்றுக் கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி கிடைக்கவில்லை. பெரும்பாலான மக்களின் வாழ்க்கை வரலாற்றில் அவர்கள் நல்லொழுக்கத்தின் அற்புதத்தைக் கண்டே உண்மையான மார்க்கத்தை ஏற்றுக் கொண்டனை நீங்கள் காண்பீர்கள். (மல்.ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 141-142; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

வெளிப்படையாகப் பார்க்கும்போது உலகவாதிகள் கூட நல்லொழுக்கத்தைக் காட்டுபவர்களாக இருப்பர். ஆனால், எதற்கு நல்லொழுக்கம் என்று நாம் பெயர் சூட்டுகின்றோமோ பொதுவாக அது ஒரு வெளி வேஷமாகத்தான் இருக்கின்றது. தங்களை நல்லவர்கள் என்று நிரூபிப்பதற்காக மட்டுமே அவர்கள் இதனை செய்கின்றனர். எங்கு அவர்களுக்கு சுய பயன்கள் இருக்குமோ அங்கு அவர்கள் தம்மைத் தாமே நல்லவர்கள் என்று நிரூபிக்கின்றனர். ஆனால், உள்ளத்தில் வேறொன்று இருக்கும். சில நேரங்களில் ஓர் உயர் அதிகாரிக்கு முன்னால் செல்வந்தருக்கு முன்னால் மிகவும் நல்லொழுக்கத்தை கடைபிடிப்பவர்களாக அவர்கள் தம்மை காட்டிக் கொள்கின்றனர். ஆனால் இது ஆமாம் போடுகின்ற செயலாகும். இது அவர்களின் பலவீனத்தை வெளிப்படுத்துகின்ற விஷயமாகும். ஏனென்றால், அச்சத்தின் காரணமாகவோ அல்லது கோழைத்தனத்தின் காரணமாகவோ அவர்கள் அத்தகைய விஷயங்களைப் பேசுகின்றனர். இது இஸ்லாத்தின் போதனை அல்ல. ஏனென்றால், இது இஸ்லாத்தின் உண்மையான நல்லொழுக்கம் அல்ல என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள். மாறாக, உள்ளத்தால் இவ்விஷயங்களை வெளிப்படுத்துவதுதான் உயர்வான நல்லொழுக்கமாகும். அனுதாபத்துடன் நடந்து கொள்வதாக இருந்தால் உளப்பூர்வமாக அவ்வாறு நடக்க வேண்டும். மற்ற நற்பண்புகளை வெளிப்படுத்துவதாக இருந்தாலும் உள்ளத்தால் அவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

இவ்விஷயத்தை விளக்கியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்: நல்லொழுக்கம் இரு வகைப்படும். அவற்றில் ஒன்று இன்றைய நாட்களில் புதிதாக கல்வி கற்றவர்கள் எடுத்துக் கூறுவதாகும். அதாவது சந்திப்புகளின்போது நாவால் புகழ்ந்து கூறுவது மற்றும் ஆமாம் போடுகின்ற நடைமுறையை அவர்கள் காட்டுகின்றனர். ஆனால் அவர்களது உள்ளங்களில் நயவஞ்சகமும் வெறுப்பும் நிறைந்திருக்கும். இத்தகைய ஒழுக்கம் திருக்குர்ஆனுக்கு மாற்றமானதாகும். இரண்டாவது

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

வகையான நல்லொழுக்கம் என்பது உண்மையான முறையில் அனுதாபத்துடன் நடந்து கொள்வ –தாகும். உள்ளத்தால் நயவஞ்சகம் இருக்கக் கூடாது. பொய்யாக புகழ்ந்து கூறுவது, ஆமாம் போடுவது ஆகியவற்றை பயன்படுத்தக் கூடாது. இதைப் பற்றி இறைவன் اِنَّ اللّٰهَ یَاۡمُرُ بِالۡعَدۡلِ وَالۡاِحۡسَانِ وَاِیۡتَآیِٔ ذِی الۡقُرۡبٰی என்று கூறுகின்றான். இதுவே முழுமையான வழிமுறையாகும். நீதியுடனும் நேர்மையுடனும் நடந்து கொள்ளுங்கள். எது உண்மையோ அதை கூறுங்கள். பிறகு எங்கு பேருபகாரம் செய்ய வேண்டிய நிலைமைகள் உருவாகின்றதோ அங்கு பேருபகாரம் செய்ய வேண்டும். பிறகு அதிலும் முன்னேறிச் சென்றால் பிறகு மற்றவர்களிடம் ஒரு தாய் தனது குழந்தையிடம் நடந்து கொள்வதைப் போன்றும் மிகவும் நெருங்கிய உறவினர் தமது நெருங்கிய உறவினரிடம் நடந்து கொள்வதைப் போன்றும் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். அத்தகைய நல்லொழுக்கத்தை அவர்களிடம் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இதுவே முழுமையான வழிமுறையாகும். ஒவ்வொரு முழுமையான வழிமுறையும் வழிகாட்டலும் இறைவனின் வார்த்தைகளில் இருக்கின்றது. யார் அவற்றிலிருந்து முகம் திருப்பிச் சென்று விடுகின்றனரோ அவர்கள் வேறு இடத்தில் நேர்வழியைப் பெற முடியாது. நல்ல போதனை என்னவென்றால், தனது நல்ல தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு உள்ளத்தின் தூய்மையை வேண்டுகின்றது. எவர்கள் இதிலிருந்து விலகி தொலைவில் சென்று விடுகின்றனரோ அவர்களை ஆழமான பார்வையுடன் நீங்கள் பார்த்தால் கண்டிப்பாக அவர்களிடம் அழுக்கு தென்படும். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 200; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே இதற்காக உள்ளத்தின் தூய்மை அவசியமான –தாகும். தம்மைத் தாமே இறைவனின் விருப்பம் மற்றும் அவனது கட்டளைக்கேற்ப நடக்க வைப்பது அவசியமானதாகும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: வாழ்க்கைக்கு எந்தவோர் உத்திரவாதமும் கிடையாது. தொழுகை, உண்மை மற்றும் தூய்மையில் முன்னேறுங்கள். அதாவது இறை வணக்கத்தில் முன்னேறுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 200; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) உங்களது உண்மையின் தரத்தை உயர்த்துங்கள். உங்களது ஒவ்வொரு விஷயத்திலும் உண்மையை உருவாக்குங்கள். சிலர் நன்மைகள் என்றால் என்ன? என்று கேட்கின்றனர். சிலர் வெளிப்படையான தொழுகைகளும் இறை வணக்கமும் தான் நன்மைகளாகும் என்று கருதுகின்றனர். அவற்றை நிறைவேற்றி விட்டால் பெரும் நன்மையை செய்ததாக ஆகி விடும் என்று கருதுகின்றனர். ஏனைய பல அடிப்படையான நல்லொழுக்கங்களை அவர்கள் பொருட்படுத்து –வதேயில்லை.

இதுபற்றி மிகவும் அழகான முறையில் ஒளியூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: நல்லொழுக்கம் மற்ற நன்மைகளின் திறவுகோல் ஆகும். எவர்கள் தமது ஒழுக்கத்தை சீர்திருத்திக் கொள்வதில்லையோ அவர்கள் படிப்படியாக பயனற்றவர்களாக ஆகி விடுகின்றனர். அவர்களிடம் மிருந்து எந்தவொரு நன்மையும் கிடைக்காது.

அன்னார் கூறுகின்றார்கள்: எனது கொள்கை இதுவாகும். அதாவது உலகில் ஒவ்வொரு பொருளும் பயன்தரக் கூடியதாக இருக்கின்றது. விஷம் மற்றும் அசுத்தம் கூட பயன்தரக் கூடியதாக இருக்கின்றது. நரம்புகள் மீது அது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால் எந்த மனிதன் உயர்ந்த நல்லொழுக்கங்களைக் கடைபிடித்து பிறருக்கு பயன் தரக்கூடியவனாக ஆகுவதில்லையோ அப்படிப்பட்டவன் எதற்கும் உதவாதவனாக ஆகி விடுகின்றான். எனவே, உயர்வான நல்லொழுக்கம் மனிதனிடம் இருந்தால்தான் அவன் பயன்தரக்கூடியவனாக ஆக முடியும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பிணம் விலங்குகளை விட மோசமானதாக ஆகி விடுகின்றது. விலங்குகளின் தோலும் எலும்புகளும் பயன்தரக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் பிணத்தின் தோல் கூட பயன்தரக் கூடியதாக இருப்பதில்லை. இந்த ஒரு நிலையில்தான் மனிதன் بَلۡ هُمۡ اَضَلُّ அதாவது விலங்குகளை விட மோசமானவன் என்பதற்கு பொருந்தக் கூடியவனாக ஆகி விடுகின்றான். மிகவும் கீழ்த்தரமான ஒரு பொருளாக அவன் ஆகி விடுகின்றான்.

எனவே, நல்லொழுக்கத்தை சரி செய்வது மிகவும் அவசியமானதாகும். ஏனென்றால் நன்மைகளின் தாய் நல்லொழுக்கம் ஆகும். (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 76; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) நல்லொழுக்கம் உருவானால்தான் மற்ற நன்மைகளைச் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைக்கின்றது.


அன்றாட விவகாரங்களில் இந்த நல்லொழுக்கம் எவ்வாறு வெளிப்படுகின்றது? இதுபற்றி ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: பிச்சை கேட்பவரைப் பார்த்து கோபப்படுகின்ற பழக்கம் சில மனிதர்களிடம் இருக்கிறது. தேவையுடையவர் எவராவது வந்தால் அவரைப் பார்த்து கோபப்படுகின்றனர். மவ்லவிகளின் நாளம் அவர்களிடம் இருந்தால் கேட்பவருக்கு ஏதாவது வழங்குவதற்குப் பகரமாக கேட்பது பற்றி அவருக்கு புரிய வைக்க ஆரம்பித்து விடுகின்றனர். கேட்பவருக்கு வழங்குவதற்குப் பகரமாக அறிவிப்பூர்வமான விஷயங்களை அவரிடம் பேச ஆரம்பித்து விடுகின்றனர். அல்லது கேட்பதிலுள்ள தீமைகள் மற்றும் நன்மைகள் பற்றி அவருக்கு எடுத்துக் கூற ஆரம்பித்து விடுகின்றனர்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: “தான் மவ்லவி என்ற திகிலை அவர் மீது அமரச் செய்து சில நேரங்களில் அவர்களைப் பார்த்து நீங்கள் படுசோம்பேறிகள் ஆவீர்கள் என்றும் கூறி விடுகின்றனர். அந்த மக்கள் மீது பரிதாபமே! அவர்களுக்கு அறிவு இல்லை. நல்ல உள்ளத்தை உடைய நேர்மையான இயல்பை உடைய மனிதருக்கு இருக்கின்ற சிந்திக்கும் தன்மை அவர்களிடம் இருப்பதில்லை. கேட்கக் கூடியவர் ஆரோக்கியமுள்ளவராக இருந்தும் கூட அவர் பிறரிடம் யாசிக்கின்றார் என்றால் சுயமே அவர் பாவம் செய்கின்றார் என்பதைக் கூட அவர்கள் சிந்திப்பதில்லை.” ஆரோக்கியமாக இருக்கும் நிலையிலும் ஒருவர் உங்களிடம் வந்து கேட்டால் அவர் செய்யும் பாவம் அவரது தலை மீது வந்து விடும். அவர் கேட்டால் நீங்கள் அவருக்கு ஏதாவது கொடுக்க வேண்டும். “அவருக்கு சிறிது வழங்குவதால் கண்டிப்பாக எந்தப் பாவமும் நிகழ்ந்து விடாது. மாறாக நபிமொழியில் லவ் அதாப ராகிபன் என்ற சொற்கள் வருகின்றன. அதாவது யாசகம் கேட்பவர் சவாரி செய்தவாறு வந்தாலும் கூட அவருக்கு எதையாவது கொடுக்க வேண்டும். மேலும் திருக்குர்ஆனில் وَاَمَّا السَّآئِلَ فَلَا تَنۡهَرۡ மேலும் உமது உதவியை கோருபவரை நீர் கடிந்து கொள்ளாதிருப்பீராக (93:11) என்ற கட்டளை இருக்கின்றது.”


ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: “இதில் இன்ன வகையிலுள்ள யாசகம் கேட்பவரை நீர் அதட்டுவீராக. இன்ன வகையிலுள்ள யாசகம் கேட்பவரை அதட்டாமல் இருப்பீராக என்று விளக்கமாகக் கூறப்படவில்லை.”

எனவே உங்களிடம் கேட்பவரிடம் நீங்கள் கடினமான நடந்து கொள்ளாதீர்கள். ஏனென்றால், அதன் மூலமாக ஒரு வகையான தீய ஒழுக்கத்திலுள்ள விதை விதைக்கப்படுகின்றது. கேட்பவரிடம் விரைவாக வெறுப்படைந்து விடக் கூடாது என்பதையே நல்லொழுக்கம் வேண்டுகின்றது. இந்த வழிமுறையின் மூலமாக உங்களை நன்மையிலிருந்து விலக்கி வைக்க வேண்டும். தீமைக்கு உங்களை வாரிசாக்க வேண்டும் என்பது ஷய்த்தானின் விருப்பமாகும்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: “சிந்தனை செய்யுங்கள். ஒரு நன்மையைச் செய்வதன் மூலம் இன்னொரு நன்மை பிறக்கின்றது. இவ்வாறே ஒரு

B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000

National
Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal
Grill house
multi cuisine family
restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

தீமை இன்னொரு தீமைக்கு காரணமாக ஆகி விடுகின்றது. எவ்வாறு ஒரு பொருள் இன்னொரு பொருளை தன் பக்கம் ஈர்த்துக் கொள்கின்றதோ அவ்வாறே இந்த ஈர்க்கும் தன்மையை அல்லாஹ் ஒவ்வொரு செயலிலும் வைத்துள்ளான். உங்களிடம் யாசகம் கேட்பவரிடம் நீங்கள் மென்மையுடன் நடந்து கொண்டால், இவ்வாறு நீங்கள் நல்லொழுக்கத்தின் சதகாவை கொடுத்து விட்டால் பிறகு இறுக்கம் விலகி நீங்கள் மற்ற நன்மைகளையும் செய்வீர்கள்.'' அதாவது உள்ளத்தில் உருவாகின்ற தடை நீங்கி மற்ற நன்மைகளைச் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைக்கின்றது.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: ''மேலும் அவருக்கு நீங்கள் சிறிது வழங்கவும் செய்வீர்கள்.'' (மல்.'பூஸாத் தொகுதி 2 பக்கம் 75-76; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) பிறகு நமது சமுதாயத்தில் பொதுவாக பெற்றோர்கள் தொடர்பாக இந்த கேள்வி கேட்கப்படுகின்றது. பெற்றோர்கள் அஹ்மதிகளாக இருந்தால் அல்லது எதிர்க்கின்றனர் என்றால் அவர்களுக்குரிய கண்ணியத்தை ஹுஸூர் (அலை) அவர்கள் எவ்வாறு நிலைநாட்டினார்கள்?

இவ்வாறே ஹுஸூர் (அலை) அவர்கள் ஷேக் அப்துர் ரஹ்மான் சாஹிபா காதியானி அவர்களின் தந்தையார் தொடர்பாக அவரிடம் கேட்டு விட்டு அவர்களுக்கு இவ்வாறு அறிவுரை கூறினார்கள்: ''அவர்களுக்காக நீங்கள் துஆ செய்யுங்கள். எல்லா வகையிலும் முயன்றவரை பெற்றோர்களின் உள்ளத்திற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும். மேலும் முன்னவரை விட அதிகமாக அவர்களுக்கு உங்களது எண்ணற்ற நல்லொழுக்கங்களையும் தூய முன்மாதிரியையும் வெளிப்படுத்திக் காட்டியவாறு இஸ்லாத்தின் உண்மையை அவர் ஏற்றுக் கொள்ளும்படி செய்யுங்கள்.''

ஏனென்றால், அவர்களின் தந்தை முஸ்லிமாக இருக்கவில்லை. எனவே, அவர்களுக்கு உங்களது முன்மாதிரியைக் காட்டுங்கள். அதன் மூலம் இஸ்லாத்தின் உண்மையை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நல்லொழுக்க முன்மாதிரியானது எத்தகையதொரு அற்புதம் என்றால் அதற்கு சமமாக வேறெந்த அற்புதமும் இருக்க முடியாது. உண்மை இஸ்லாத்தின் அளவுகோல் இதுவாகும். இதன் மூலமாக மனிதன் உயர்ந்த நல்லொழுக்கத்தில் நிலைபெற்று விடுபவனாக ஆகி விடுகின்றான். அவன் ஒரு தனிச்சிறப்புமிக்க நபராக ஆகி விடுகின்றான். இறைவன் உங்கள் மூலமாக அவர்களது உள்ளத்தில் இஸ்லாத்தின் மீதுள்ள அன்பை இடுவானாக. இஸ்லாம் பெற்றோர்களுக்கு தொண்டு செய்வதை தடுக்கவில்லை. மார்க்கத்திற்கு எவ்வித பாதகமும் ஏற்படாத வகையில் உலக விஷயங்களில் எல்லா வகையிலும் முழுமையாக அவர்கள் கூறுவதற்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். உள்ளத்தாலும் உயிராலும் அவர்களுக்கு தொண்டு செய்யுங்கள். (மல்.'பூஸாத் தொகுதி 4 பக்கம் 175 அடிக்குறிப்பு எண்: 1; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அன்னார் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்: ''நல்லொழுக்கம்தான் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையில் வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றது.''

இதனை விளக்கியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ''முதலில் விலங்குகளால் அளவு மற்றும் தரம் ஆகியவற்றை பிரித்தறிய முடியாது. எது அவற்றிற்கு முன்னால் வந்தாலும் எந்த அளவு அது இருந்தாலும் அவற்றை அவை உண்கின்றன. உதாரணமாக, நாய் எந்த அளவு சாப்பிடுகின்றது என்றால், இறுதியில் அது வாந்தி எடுக்கின்றது. எவ்வளவு உண்ண வேண்டும்? எந்த நிலைமையில் இருக்க வேண்டும்? எந்த அளவு உண்ண வேண்டும்? என்பதில் அவற்றிற்கு எந்த வித்தியாசமும் இருப்பதில்லை.''

அன்னார் நாயின் உதாரணத்தைக் கூறினார்கள். எவ்வளவு சாப்பிட வேண்டும் என்று அதற்கு தெரியாது. அது சாப்பிட்டுக் கொண்டே செல்கிறது. இறுதியில் அது வாந்தி எடுக்கின்றது. இங்கும் நாம் பார்த்திருக்கின்றோம். சில மக்களின் நிலைமை இவ்வாறுதான் இருக்கின்றது. அவர்களது பேராசை முடிவதேயில்லை. ஆகுமான மற்றும் தகாத வழிகளில் உணவாக இருந்தாலும் சரி அல்லது மக்களின் பொருளாக இருந்தாலும் சரி அவற்றை அவர்கள் விழுங்குவதற்கு முயற்சி செய்கின்றனர்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இரண்டாவதாக, கால்நடைகள் ஹலால் மற்றும் ஹராமை பிரித்தறிவதில்லை. ஒன்று, எவ்வாறு வாழ வேண்டும்? நமது நிலைமை எவ்வாறிருக்க வேண்டும்? ஆன்மீகம் என்ன கூறுகிறது? எந்த அளவு ஆகுமான வழிகள் மூலம் உண்பதற்கும் சம்பாதிப்பதற்கும் உள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது என்பதெல்லாம் அதற்கு தெரியாது. தனது கருவூலத்தை மட்டும் நிரப்பிக் கொண்டே செல்ல வேண்டும் என்ற நிலை மட்டும் இருக்கக் கூடாது. மாறாக, அது பற்றிய அளவை மனிதன் தெரிந்திருக்க வேண்டும். இரண்டாவது விஷயம், விலங்குகளால் ஹராம் மற்றும் ஹலாலுக்கு இடையிலுள்ள வித்தியாசத்தைப் பிரித்தறிந்து கொள்ள முடியாது. உதாரணமாக, காளை மாட்டின் உதாரணத்தைக் கூறலாம். இது அண்டை வீட்டுக்காரரின் வயல். நான் அங்கு போகக் கூடாது என்பதை அதனால் பிரிந்தறிந்து கொள்ள முடியாது. இது புல்லை மேய்கின்றபோது அது எந்த வயலில் மேய்கின்றதோ அங்கு வேலி அமைக்கப்படாமல் இருந்தால் அது, தான் மேய்கின்ற வயலின் எல்லையைத் தாண்டி மற்ற வயலுக்கும் சென்று விடும். அதனால் இவற்றை பிரித்தறிய முடியாது.''

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''அனாதைகளின் செல்வங்களை விழுங்குவதில் மக்கள் எவ்வித தயக்கமும் காட்டுவதில்லை. ஒரு அனாதையிடம் உள்ள புல்லை ஒரு பசுவின் முன்னால் வைத்தால் அது எவ்வித சஞ்சலமும் இன்றி அதை சாப்பிட்டு விடும்.''

அதாவது, ஒரு பசுவின் முன்னால் புல்லை வைத்து விட்டால் அது ஆகுமான வழியில் அதற்கு கிடைத்திருந்தாலும் அல்லது தகாத வழியில் அதற்கு கிடைத்திருந்தாலும் பசு அதை சாப்பிட்டு விடும். இவ்வாறே சில மக்கள் ஆகுமான மற்றும் தகாத வழிகளில் அனாதைகளின் செல்வங்களை விழுங்கி விடுகின்றனர். இவர்களின் நிலைமை பற்றியே وَالنَّارُ مَثْوًى لَّهُمْ இவர்களது தங்குமிடம் நரகமாகும் (47:13) என்று கூறப்பட்டிருக்கின்றது. தகாத வழிகளில் உண்ணும்போது பிறகு அத்தகைய மனிதர்களின் தங்குமிடம் நரகமாக ஆகி விடுகின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சுருக்கமாக, நினைவில் கொள்ளுங்கள். இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று, இறைவனின் மகத்துவமாகும். எனவே எது மனித இனத்திற்கு எதிரானதாக இருக்குமோ அதுவும் நல்லொழுக்கத்திற்கு எதிரானதாகவே இருக்கும். அல்லாஹ்விற்குரிய உரிமைகளைச் செலுத்தாம–லும் அவனை வணங்காமலும், அவன் கூறுகின்ற விஷயங்களைக் கவனமாகக் கேட்காமலும் அவனது திருப்தியைப் பெறுவதற்கு முயற்சி செய்யாமலும் இருந்தால் அது நல்லொழுக்கம் அல்ல. அவ்வாறே மக்களுக்குரிய உரிமைகளைச் செலுத்தாமல் தகாத வழிமுறைகள் மூலம் அவர்களது செல்வத்தை விழுங்குகின்றீர்கள் என்றால் அல்லது அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்கின்றீர்கள் என்றால் அல்லது வேறு வகையில் தீய ஒழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றீர்கள் என்றால் இதுவும் நல்லொழுக்கத்திற்கு மாற்றமானதாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: அந்தோ! மனித வாழ்க்கையின் அசல் நோக்கமாகவும் குறிக்கோ–ளாகவும் இருக்கின்ற இந்த விஷயங்களை மிகவும் குறைவான மக்களே சிந்திக்கின்றனர். (மல்.'பூஸாத் தொகுதி 2 பக்கம் 78-79; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு இன்னொரு தீமை ஆணவம் கொள்வதாகும். அது நன்மைகளிலிருந்து மனிதனை விலக்கி வைக்கின்றது. இன்னும் சொல்வதென்றால், அது இறைவனின் வெறுப்பிற்கு காரணமாக நம்மை ஆக்கி விடுகின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதர்களிடம் பல கீழ்த்தரமான தீய ஒழுக்கங்களின் ஜின்கள் இருக்கின்றன என்று சூஃபிகள் கூறுகின்றனர். அவை வெளியேற ஆரம்பிக்கும்போது வெளியேறிக் கொண்டே இருக்கின்றன. எல்லாவற்றையும் விட கடைசியாக இருக்கின்ற ஜின் ஆணவத்தின் ஜின் ஆகும். அது அவனிடம் இருக்கின்றது. அது இறைவனின் அருள், மனிதனின் உண்மையான முயற்சி மற்றும் துஆக்களினால் வெளியேறுகின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பல மனிதர்களும் தங்களை பணிவுள்ளவர்–களாகக் கருதுகின்றனர். ஆனால் அவர்களிடம் கூட ஏதாவது ஒரு வகையில் ஆணவம் இருக்கின்றது. எனவே, ஆணவத்தின் நுட்பத்திலும் நுட்பமான வகைகளிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். சில நேரங்களில் இந்த ஆணவம் செல்வத்தால் உருவாகின்றது. ஆணவம் கொள்கின்ற செல்வந்தர் மற்றவர்களை ஒன்றுமற்ற வறியவராகக் கருதுகின்றார். என்னுடன் போட்டி போடுவதற்கு இவர் யார்? என்று அவர் கேட்கின்றார். சில நேரங்களில் குடும்பம் மற்றும் குலம் தொடர்பாக ஆணவம் ஏற்பட்டு விடுகின்றது. நான் உயர்ந்த குலத்தைச் சார்ந்தவன். இவர் தாழ்ந்த குணத்தைச் சார்ந்தவர் என்று அவர் கருதுகின்றார். சில நேரங்களில் அறிவின் காரணமாகவும் ஆணவம் உருவாகி விடுகின்றது. ஒரு நபர் தவறாக எதையாவது கூறி

விட்டால் இவர் உடனடியாக அவரது குறையைப் பிடித்துக் கொண்டு இவருக்கு ஒரு வார்த்தையைக் கூட சரியாக சொல்லத் தெரியவில்லை என்று கூச்சலிட ஆரம்பித்து விடுகின்றனர். சுருக்கமாக, ஆணவத்தின் பல்வேறு வகைகள் இருக்கின்றன. இவை அனைத்தும் மனிதனை நன்மைகளிலிருந்து விலக்கி வைத்து விடுகின்றன. மேலும் மக்களுக்கு பயன் தருவதிலிருந்து அவனை தடுத்து விடுகின்றது. இவை அனைத்திலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 402; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: நல்லொழுக்கத்தை விட்டு விடுவதே தீமையாகவும் பாவமாகவும் இருக்கின்றது. பிறகு, இதனால் நன்மை செய்வதற்கான நல்வாய்ப்பு இல்லாமல் அழிந்து விடுகின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருவர் விபச்சாரம் செய்கின்றபோது அதனால் அந்த பெண்ணின் கணவருக்கு எந்த அளவு துக்கம் ஏற்படும் என்பது பற்றி அவருக்குத் தெரியாது. அவர் அந்த துக்கத்தை உணர முடியும் என்றால், நல்லொழுக்கத்தின் பங்கு அவருக்கு கிடைத்தால் இத்தகைய தீய செயலை அவர் செய்யமாட்டார். அத்தகைய தகுதியற்ற மனிதனுக்கு இந்த தீய செயலைச் செய்வதனால் மனிதனிடம் எத்தகைய அபாயகரமான விளைவுகள் உருவாகின்றன என்பதைப் பற்றி அவர் தெருந்திருந்தால் அதிலிருந்து அவர் விலகி விடுவார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நபர் திருடுகின்றார். அந்த அநீதியிழைப்பவர் இரவில் ஏதாவது சாப்பிடுவதற்காக ஓர் ஏழை மனிதரின் வீட்டில் உள்ளதை திருடி விடுகின்றார். அவருக்கென்று எதையும் விட்டு வைப்பதில்லை. சில நேரங்களில் இதையும் பார்க்கின்றோம். ஓர் ஏழையின் பல வருடங்களின் உழைப்பை முற்றிலுமாக இந்த திருடர் அழித்து விடுகின்றார்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: அந்த திருடன் இந்த நிலைமைகளைப் பற்றி உணர்ந்திருந்தால், நல்லொழுக்க நிலைமையிலிருந்து விலகி குருடராக ஆகாமல் இருந்தால் அவர் ஏன் திருடப் போகின்றார்?

இந்த பத்திரிகைகளில் வேதனை மிக்க மரணங்களைப் பற்றிய செய்திகளை படிக்க நேரிடுகின்றது. இந்த சிறுவன் நகையின் மீது கொண்ட பேராசையின் காரணமாக கொல்லப்பட்டான். இந்த இடத்தில் இந்த பெண்ணை கொலை செய்து விட்டனர் என்ற செய்திகளைப் படிக்கின்றோம். சிந்தனை செய்து பாருங்கள்! நல்லொழுக்க நிலைமை சரியாக இருந்தால் அத்தகைய துன்பங்கள் ஏன் வருகின்றன? தன்னைப் போன்ற மனிதன் மீது அதுபோன்ற துன்பங்கள் வரலாம். அதை அவன் உணராமலேயே இருந்து விடலாம். (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 77; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) நல்லொழுக்கம் இல்லாமலும், தீமை பற்றிய உணர்வே இல்லாமலும், அல்லாஹ் பற்றிய அச்சமும் இல்லாமலும் உள்ள நிலைமையின் காரணமாகவே இத்தகைய அவல நிலை உருவாகின்றது. அது அல்லாமல் அல்லாஹ்வின் மீதுள்ள அச்சமும் மனிதத் தன்மையும் மனிதனிடம் இருந்தால் அவன் ஒருபோதும் இதுபோன்ற செயல்களைச் செய்ய மாட்டான்.

தனது ஜமாஅத்திற்கு அறிவுரை கூறியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எவர் தனது அண்டை வீட்டுக்காரருக்கு தமது ஒழுக்கத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காட்டுகின்றாரோ முதலில் அவர் எப்படி இருந்தார்? இப்போது எப்படி இருக்கின்றார்? என்று காட்டுகின்றாரோ ஒரு வகையில் அவர் ஓர் அற்புதத்தை காட்டுகின்றார். அதன் தாக்கம் அந்த அண்டை வீட்டுக்காரர் மீது மிகவும் உயர்ந்த நிலை ஏற்படுகின்றது. இந்த ஜமாஅத்தில் என்ன முன்னேற்றம் ஏற்படுகின்றது. இந்த ஜமாஅத்தில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது எங்களுக்கு தெரியவில்லை என்று மக்கள் ஆட்சேபனை செய்கின்றனர். இட்டுக்கட்டி பொய் கூறுவதிலும் கோபத்திலும் ஆத்திரத்திலும் இவர்கள் ஆழ்த்தப்பட்டிருக்கின்றனர் என்று அவதூறாகக் கூறுகின்றனர். இது அவர்கள் வெட்கப்படுவதற்குக் காரணமாக அமையவில்லையா? மனிதன் இது மிகவும் சிறந்தது என்று கருதியவாறு இந்த இயக்கத்திற்கு வந்துள்ளான். ஒரு நல்ல நேர்மையான மகள் தனது தந்தைக்கு இருக்கின்ற நல்ல பெயரை வெளிப்படுத்தக் கூடியவராக இருக்கின்றார். ஏனென்றால் பைஅத் செய்து வருபவர் மகளைப் போன்றவராவார். எனவே, பைஅத் செய்து இந்த இயக்கத்தில் வருகின்ற உங்கள் மீது, மக்கள் இது நடந்தது; அது நடந்தது என்று குற்றம் சாட்டுகின்றனர் என்றால் அந்தக் குற்றங்களை உண்மையிலேயே உங்களிடம் இருக்கின்றன என்பது நிரூபிக்கப்பட்டு விடக் கூடாது.

அவர்கள் கூறுகின்றார்கள்: எவ்வாறு பௌதீக தந்தை ஒருவரை பூமியில் கொண்டு வருவதற்குக் காரணமாக இருக்கின்றாரோ அவரது வெளிப்படையான வாழ்விற்குக் காரணமாக இருக்கின்றாரோ அதுபோன்று ஆன்மீக தந்தை அவரை வானத்திற்குக் கொண்டு செல்கின்றார். அந்த உண்மையான தலைமையகத்தின் பக்கம் அவருக்கு வழிகாட்டுகின்றார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு மகன் தனது தந்தைக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதை நீங்கள் விரும்புவீர்களா? அந்த மகன் விபச்சாரிகளிடம் செல்வதையும் சூதாட்டத்தில் ஈடுபட்டுத் திரிவதையும் மது அருந்துவதையும் அல்லது தந்தையின் அவப்பெயருக்கு காரணமாக விளங்குகின்ற அத்தகைய தீய செயல்களில் ஈடுபடுவதையும் நீங்கள் விரும்புவீர்களா? இந்த செயலை விரும்புகின்ற எந்தவொரு மனிதனும் இருக்க மாட்டார் என்பதை நான் அறிவேன். ஆனால், அந்த தகுதியற்ற மக்கள் அவ்வாறு செயல்படும்போது பிறகு மக்களது நாவு அடைபட்டு இருக்க முடியாது. மக்கள் அந்த மகனை அவனது தந்தையுடன் தொடர்புபடுத்தி, இவன் இந்த மனிதரின் மகனாவான். இவன் இந்த தீய செயலைச் செய்கின்றான் என்றே கூறுவார்கள். அந்த தகுதியற்ற மகன் சுயமே தந்தைக்கு அவப்பெயர் ஏற்பட காரணமாக இருக்கின்றார். இவ்வாறே ஒரு மனிதர் ஓர் இயக்கத்தில் இணையும்போது அவர் அந்த இயக்கத்தின் மகத்துவத்தையும் மதிப்பையும் கருத்தில் கொள்ளாமல் இருந்தால், மேலும் அதற்கு எதிராக செயல்பட்டால் அவர் அல்லாஹ்வின் பிடியின் கீழ் வந்து விடுவார். ஏனென்றால் அவர் தன்னை மட்டும் அழிவிற்கு ஆளாக்கிக் கொள்ளவில்லை. மாறாக மற்றவர்களுக்கும் ஒரு தீய முன்மாதிரியாக இருந்து அவர்களை நற்பாக்கியத்திலிருந்தும் நேர்வழியிலிருந்தும் அவர் விலக்கி வைக்கின்றார். தீய முன்மாதிரியைப் பார்க்கும்போது மக்கள் அந்த ஜமாஅத்தை விட்டு விலகி தொலைவில் சென்று விடுவார். அதற்கு அருகில் அவர்கள் வரமாட்டார்கள்.

எனவே, உங்களுக்கு எந்த அளவு சக்தி இருக்கின்றதோ அந்த அளவு நீங்கள் இறைவனிடம் உதவி கேளுங்கள். உங்களது முழுமையான ஆற்றலுடனும் தைரியத்துடனும் உங்களது பலவீனங்களை அகற்ற முயற்சி செய்யுங்கள். அதை நீங்கள் செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் அப்போது உண்மையுடனும் உறுதியுடனும் கையேந்துங்கள். பணிவுடனும் உருக்கத்துடனும் ஏந்தப்பட்ட கைகள் உண்மை மற்றும் உறுதியின் தூண்டுதலால் எழுகின்றபோது அவை காலியாக திரும்ப அனுப்பப்பட மாட்டாது. நாம் நமது அனுபவத்தின் மூலம் இதனை கூறுகின்றோம். நமது ஆயிரக்கணக்கான துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இப்போதும் ஏற்றுக் கொள்ளப்பட்டு கொண்டிருக்கின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நபர் தன்னை போன்ற மனித இனத்திற்காக அனுதாபம் கொள்கின்ற உணர்வு இல்லாமல் இருக்கின்றார் என்றால் அவர் கருமியாவார் என்பது உறுதியான விஷயமாகும். மற்ற மனிதர்களுக்காக அவரிடம் அனுதாப உணர்வு இல்லையென்றால் அவர் கருமியாவார். நான் நன்மை இருக்கின்ற ஒரு வழியை பார்க்கின்றேன் என்றால் அது பற்றி குரல் கொடுத்து அழைத்து மக்களுக்குக் கூறுவது எனது கடமையாகும். ஒருவர் அதற்கேற்ப செயல்படுகின்றாரா? இல்லையா? என்ற விஷயத்தை நாம் பொருட்படுத்தக் கூடாது. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 146-147; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அன்னார் கூறுகின்றார்கள்: எதுவரை மனிதன் முயற்சி செய்வதில்லையோ துஆவின் மூலமாக பயன் அடைவதில்லையோ அதுவரை அவரது உள்ளத்தில் உருவாகின்ற நோய் அவரை விட்டு விலக முடியாது. அல்லாஹ் கூறுகின்றான்: إِنَّ اللَّهَ لَا يُغَيِّرُ مَا بِقَوْمٍ حَتَّىٰ يُغَيِّرُوا مَا بِأَنْفُسِهِمْ சமுதாயத்தின் மீது வருகின்ற ஒவ்வொரு அழிவையும் துன்பத்தையும் சுயமே அந்த சமுதாயம் தம்மிடமிருந்து விலக்கி வைப்பதற்கு முயற்சி செய்யாத வரை அல்லாஹ் அவற்றை அந்த சமுதாயத்திலிருந்து அகற்ற மாட்டான். **(13:12)** அதற்காக தைரியத்துடனும் வீரத்துடனும் அவர்கள் செயல்படாத வரை அல்லாஹ் எந்த மாற்றத்தையும் அந்த சமுதாயத்தில் ஏற்படுத்த மாட்டான். இது அல்லாஹ்வின் மாறாத நடைமுறையாகும். அது பற்றி وَلَنْ تَجِدَ لِسُنَّةِ اللَّهِ تَبْدِيلًا நீர் அல்லாஹ்வின் நடைமுறையில் எந்த மாற்றத்தையும் காணமாட்டீர் **(33:63)** என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே நமது

ஜமாஅத்தாக இருந்தாலும் சரி வேறு யாராக இருந்தாலும் சரி அவர்கள் முயற்சி மற்றும் துஆக்கள் மூலம் செயல்படுவதன் மூலமாகவே அவர்களது ஒழுக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அது அல்லாமல் அது சாத்தியமற்ற ஒன்றாகும்.

அல்லாஹ் நமக்கு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி நடந்தவாறு நமது ஒழுக்கத்தை எல்லா வகையிலும் எல்லா சந்தர்ப்பத்திலும் எல்லா இடத்திலும் எல்லா நிலையிலும் மிகவும் சிறந்த முறையில் வைத்திருப்பதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. நமது நல்லொழுக்கத்தின் தரம் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக இருக்கட்டுமாக. உலகத்திற்கு காட்டுவதற்காக அது இருக்கக் கூடாது. படைப்பிணங்களுக்காக உண்மையான அனுதாப உணர்வு நமது உள்ளங்களில் உருவாகட்டும். நாம் இறையச்சத்தின் தரத்தை உயர்த்தக் கூடியவர்களாக இருப்போமாக. நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். எனவே, நமது எந்த ஒரு செயலும் இஸ்லாத்திற்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் அவப்பெயரை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இல்லாமல் இருக்கட்டும் என்ற சிந்தனை எப்போதும் நம்மிடம் இருந்து வர வேண்டும். இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைப் பரப்புபவர்களாக நாம் இருக்க வேண்டும். மேலும், உலகை இதன் தாக்கத்தின் கீழ் கொண்டு வருபவர்களாக நாம் இருக்க வேண்டும். இதற்கும் மேலாக நாம் நல்லொழுக்கத்தின் தரத்தை உயர்த்துவதற்கு எல்லா சமயத்திலும் முயற்சி செய்பவர்களாக இருப்போமாக. அல்லாஹ்வின் முன்பு குனிந்தவாறு துஆக்கள் செய்து அல்லாஹ்விடமிருந்து இதனை பெறுவதற்கு உதவி கேட்பவர்களாக இருப்போமாக.

தொழுகைகளுக்குப் பிறகு நான் ஒருவருக்கு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். இது கராச்சியைச் சார்ந்த Defence Society ஹல்காவைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஷேக் அப்துல் ஹமீது சாஹிபுடைய மகனான மதிப்பிற்குரிய ஷேக் அப்துல் மஜீது சாஹிப் உடையதாகும். பிப்ரவரி 15 ஆம் தேதி தமது 88 –வது வயதில் இவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவர்கள் தாத்தாவான ஜலந்தரைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஷேக் நூர் அஹ்மது சாஹிப் மூலமாக வந்தது. இவர்களது பெயரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது அஞ்சாமே ஆத்தம் என்ற நூலில் தமது 313 சஹாபாக்களின் பெயரைக் குறிப்பிட்டு எழுதியுள்ள இடத்தில் 242 –வது பெயராக ஷேக் நூர் அஹ்மது சாஹிப் ஜலந்தரி என்று இவர்களது பெயரை எழுதியுள்ளார்கள். 1929 ஆம் ஆண்டு இவர்கள் ஜலந்தரில் படித்தார்கள். காதியானிலுள்ள தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் F.Sc. படித்த பிறகு லாஹூரிலுள்ள அரசுக் கல்லூரியில் Chemical Engineering –ல் இவர்கள் M.Sc. படித்தார்கள்.

பிறகு, 1951 முதல் 1953 வரை இங்கு யூ.கே –வின் Surrey University –யில் Metalogical Engineering படித்தார்கள். பிறகு, கராச்சியில் அவர்களுக்கு செக்ரட்டரி ஜாயிதாத், சத்ர் இம்தாது கமிட்டி, ஹல்காவில் சத்ர், கராச்சியின் துணை அமீர் ஆகிய பொறுப்புகளை வகித்து ஜமாஅத்திற்கு கொண்டு செய்கின்ற நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது. தலைமையக மஜ்லிஸ் தஹ்ரீகே ஜதீதின் உறுப்பினராகவும் இவர்கள் இருந்தார்கள். இவர்களது சந்ததிகளில் இவரது ஒரு மகனான சல்மா தாரிக் அவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் தாரிக் சுஜாத் சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். இவர்களுக்கு இரண்டு பேரர்களும் ஒரு பேத்தியும் இருக்கின்றார்கள்.

இவர்களது பேரர் எழுதுகின்றார்கள்: சிறு வயதிலிருந்தே இவர்கள் காதியானிலிருந்த பெரியோர்களின் நட்பில் இருந்து வந்தார்கள். அல்லாஹ்வுடன் ஒரு சிறப்பான தொடர்பு இருந்து வந்தது. இவர்கள் கூறினார்கள்: மெட்ரிக் தேர்வில் ஆங்கிலப் பாடத்தின் தேர்வை இவர்கள் சரியாக எழுதவில்லை. இவர்கள் பள்ளிவாயிலை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தபோது ஹஸ்ரத் மவ்லானா ஷேர் அலி சாஹிப் அவர்கள் பள்ளிவாயிலிருந்து வெளியே வந்ததும் இவர்கள் அவர்களை சந்தித்தார்கள். மவ்லானா சாஹிப் அவர்கள் தேர்வு பற்றி கேட்டபோது நான் தேர்வில் நன்றாக எழுதவில்லை என்று இவர்கள் கூறினார்கள். மவ்லானா ஷேர் அலி சாஹிப் அவர்கள் கையேந்தி அங்கேயே துஆ செய்தார்கள். பிறகு அவர்களுக்கு நீங்கள் தேர்வு பெற்று விடுவீர்கள் என்ற நற்செய்தியையும் கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த துஆ எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றால், அதற்கு பிறகு ஒவ்வொரு தேர்விலும் நான் தேர்ச்சி பெற்றுக் கொண்டே இருந்தேன். துக்கம் மற்றும் மகிழ்ச்சியின் பல்வேறு நிலைமைகள் இவர்களுக்கு வந்தது. இங்கிருந்து சென்ற பிறகு பல்வேறு வேலைகளை இவர்கள் பார்த்து வந்தார்கள். ஜமாஅத்திற்கு இருந்து வந்த எதிர்ப்பின் காரணமாகவோ அல்லது உயர் அதிகாரிகள் இவர்களுடன் தவறான முறையில் நடந்து கொண்டதன் விளைவாகவோ பல வேலைகளிலிருந்து இவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். இறுதியில் இவர்கள் வியாபாரம் செய்ய ஆரம்பித்தார்கள். வியாபாரம் செய்தபோது தனக்கு ஏற்படும் செலவுகளுக்காக கொஞ்சம் தொகையை வைத்து கொண்டு எஞ்சியிருப்பதை முழுவதுமாக ஜமாஅத்திற்கு கொடுத்து விடுவேன் என்று இவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். பிறகு அல்லாஹ்வின் அருளால் தமது வாழ்வின் இறுதி நாள் வரை அல்லாஹ்வுடன் செய்த அந்த உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்றினார்கள். இவர்கள் வியாபாரம் செய்தார்கள். தொழிற்சாலைகளை நிறுவினார்கள். அவற்றிலிருந்து கிடைக்கும் இலாபத்தில் ஒரு பெரும் பகுதியை இவர்கள் ஜமாஅத்திற்காக செலவு செய்துள்ளார்கள். சந்தா கொடுத்து வந்தார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் M.T.A –வை தொடங்கிய சமயத்தில் அப்போது இவர்கள் உடனடியாக ஒரு கோடி ரூபாயை அதற்காக இவர்கள் வழங்கினார்கள். இவ்வாறே ஒருமுறை ரஸ்யாவில் பள்ளிவாயில் கட்டுவதற்கான எண்ணம் ஹுஸூர் ரஹிமஹுல்லாஹுத்தஆலா வெளியிடப்படுவதற்கு முன்னரே ரஷ்யாவிலிருந்து ஒரு குழு இங்கு வந்து ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் வந்தனர். அது பற்றிய விஷயங்கள் பேசப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் எந்த திட்டமும் இதற்காக அறிவிப்பு செய்யப்படாத நிலையில் ஹுஸூர் அவர்களின் தனிச் செயலர் அவர்கள் ஹுஸூர் அவர்களிடம் அங்கு பள்ளிவாயில் கட்டுவதற்காக ஒருவர் ஒரு பெரும் தொகையை கொடுத்துள்ளார் என்று தெரிவித்தார்கள். எந்த ஒரு அறிவிப்பும் செய்யப்படாத நிலையில் அவர்கள் இந்த தொகையை கொடுத்ததற்காக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் தமது மகிழ்ச்சியை அவர்களுக்கு தெரிவித்தார்கள்.

இவ்வாறே அங்குள்ள முரப்பி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: 2010 ஆம் ஆண்டு லாஹூரிலுள்ள தாருல் திக்ரில் மே 28 ஆம் தேதி லாஹூர் டவுணில் ஷஹாதத் சம்பவம் நிகழ்ந்த சமயத்தில் அதே நாள் மாலை நான் அலுவலகத்திற்கு சென்ற சமயத்தில் செக்ரட்டரி மால் அவர்கள் ஒரு ரசீதில் எழுதுவதை நான் பார்த்தேன். அந்த ரசீதில் அவர்கள் பல பூஜ்ஜியங்களை எழுதிக் கொண்டிருந்தார்கள். நீங்கள் தவறாக எதுவும் எழுதிவிடவில்லையே என்று நான் அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர் இல்லை. இப்போது ஷேக் சாஹிப் அவர்கள் ஸய்யிதுனா பிலால் ஃபண்டிற்காக ஒரு கோடி ரூபாய் ரொக்கத் தொகையைத் தந்து விட்டுச் சென்றுள்ளார்கள் என்று கூறினார். இவ்வாறே திருக்குர்ஆனை வெளியிடுவதற்காகவும் இவர்கள் பெரும் தொகையை வழங்கியுள்ளார்கள். காரச்சி ஜமாஅத்தின் எண்ணற்ற Project –களுக்காக இவர்கள் சந்தா கொடுத்துள்ளார்கள். மேலும் மிகவும் எளிமையாகவே எப்போதும் இவர்கள் தமது வாழ்வைக் கழித்தார்கள். அவர்களது வெளிப்புற தோற்றத்தை வைத்து இவர்கள் இரண்டு தொழிற்சாலைகளுக்கு எஜமானராகவும் பெரும் செல்வந்தராகவும் இருக்கின்றார் என்று தோன்றவே செய்யாது. எதனை சம்பாதித்தாலும் தமது வீட்டில் செலவுகளுக்காக கொஞ்சம் தொகையை வைத்து விட்டு எஞ்சியிருந்த தொகையை அவர்கள் ஜமாஅத்திற்கு வழங்கி விட்டார்கள். இறுதியின் எனது இந்த சொத்துக்களும் ஜமாஅத்திற்கே உரியது என்று அவர்கள் வஸிய்யத்தும் செய்திருந்தார்கள்.

அல்லாஹ் தனது கருணையில் அவர்களை மூழ்க வைப்பானாக. இவர்களது பேரர்களுக்கும் பேத்திகளுக்கும் பிள்ளைகளுக்கும் இவரது மகளுக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக. இவர்களது நல்ல முன்மாதிரியைப் பின்பற்றி நடப்பதற்கான நல்வாய்ப்பையும் இவர்களுக்கு வழங்குவானாக. தொழுகைகளுக்குப் பிறகு இவருக்கு நான் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★

# ஜுமுஆ பேருரை

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களின் தியாகங்கள், அவர்களின் உயர் தகுதி, அந்தஸ்து மற்றும் அல்லாஹ் அவர்கள் மீது செய்திருந்த அருள்கள் ஆகியவை தொடர்பாக ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களோ எல்லா மன எழுச்சிகளிலிருந்தும் தூய்மையாக இருந்தார்கள். தூய உள்ளத்துடன் அல்லாஹ்வுக்காக களங்கமற்ற நிலையில் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக மட்டுமே வாழ்வைக் கழிப்பவர்களாக அவர்கள் இருந்தனர். இந்த நிலையில் இருந்ததால் இறைவனும் அவர்களுக்கு தனது அருளை வழங்குகிறான். அளவில்லாமல் வழங்குகிறான். நாம் சஹாபாக்களின் வாழ்வில் இதனை பார்க்கிறோம்.

பெருமானார் (ஸல்) அவர்களின் சஹாபாக்களுக்கு அல்லாஹ்வுடன் இருந்த தொடர்பு, இறைவன் மீது அவர்களுக்கு இருந்த அன்பின் காரணமாக அவனது திருப்தியைப் பெறுவதற்காக அவர்கள் செய்த மகத்தான தியாகங்கள் தொடர்பாக ஆன்மாவுக்கு எழுச்சியூட்டும் வகையில் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றல் எத்தகைய ஆன்மாவை சஹாபாக்கள் மீது ஊதியது என்றால், அவர்கள் மரணிக்கும்போது கூட கஅபாவுடைய இறைவன் மீது ஆணையாக! நாங்கள் வெற்றி பெற்று விட்டோம்; நாங்கள் இறைவனை பெற்று விட்டோம் என்று கூறினர். இம்மக்கள் அநீதிக்கு எதிராக யுத்தம் செய்பவர்களாக இருந்தனர். அநீதியைப் பரப்புபவர்களாக அவர்கள் இருக்கவில்லை.

எந்தவொரு சஹாபி பற்றிய சம்பவத்தை எடுத்துக் கொண்டாலும் கலப்பற்ற தன்மை, பற்றுறுதி, இறைவனுக்காக உயிரை அர்ப்பணித்தல் ஆகியவற்றிற்காக அவர்கள் எல்லா நேரமும் தயாராக இருந்ததைப் பார்க்க முடிகின்றது.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தமது சஹாபாக்கள் மீது இருந்த அன்பின் காரணமாகவும் அன்னாரின் தூய்மைப்படுத்தும் ஆற்றலின் காரணமாகவும் அல்லாஹ்வுடன் அந்த சஹாபாக்களுக்கு தொடர்பு உருவானது. பிறகு இறைவனும் அந்த சஹாபாக்களுக்கு சில நேரங்களில் நேரடியாக பலவற்றையும் வழங்கினான் அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாகவும் அவர்களுக்கு வழங்கினான். அதைப் பற்றி குறிப்பிடுவதும் கூட நமக்கு சஹாபாக்களின் உயர் தகுதி பற்றியும் அந்தஸ்து பற்றியும் தெரிவிக்கின்றது.

அவர்களின் உள்ளத்தில் இருந்து உலகத்தின் தேட்டமே அழிக்கப்பட்டு விட்டது. அவர்கள் இறைவனை பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். மிகவும் சுறுசுறுப்பாக இறை வழியில் தம்மை அர்ப்பணித்து விட்டார்கள். இதனால் அவர்களில் ஒவ்வொருவரும் இப்ராஹீம் ஆக இருந்தார்கள்.

---

அல்லாஹ் நமக்கு சரியான முறையில் சஹாபாக்களின் அந்தஸ்தை புரிவதற்கு வாய்ப்பு தருவானாக. அவர்களின் முன்மாதிரி படி நடந்து நமது களங்கமின்மை மற்றும் பற்றையும் கூட அதிகமாக்குவதற்கான வாய்ப்பினை வழங்குவானாக.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**9 மார்ச் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **9 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّيْنَ.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களின் தியாகங்கள், அவர்களின் தகுதி, அந்தஸ்து மற்றும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய வெகுமதி –களைக் குறிப்பிட்டவாறு கூறினார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தனது எல்லாப் பொருள்களையும் அல்லாஹ்வின் வழியில் கொடுத்து விட்டார்கள். அதன் காரணமாக தாம் கம்பளியை உடுத்திக் கொண்டார்கள். அல்லாஹ் அவர்களுக்கு எதனை வழங்கினான்? முழு உலகத்துக்கும் அரசராக்கினான். அவருடைய கைகளால் இஸ்லாத்தை புதிய வடிவில் மீண்டும் உயிர் பெற வைத்தான். அன்னார் மார்க்கத்தை துறந்து விட்ட அரபு உலகத்தை மீண்டும் வென்று காட்டினார்கள். அல்லாஹ் அவர்களுக்கு எதனை வழங்கினானோ அதற்கு அளவே இல்லை. சுருக்கமாக, அம்மக்களின் உண்மை, பற்று, களங்கமின்மை மற்றும் நன்றியுணர்வு ஆகியவை ஒவ்வொரு முஸ்லிமுக்கும் பின்பற்றத்தக்க முன்மாதிரியாகும்.

சஹாபாக்களின் வாழ்வு எத்தகைய வாழ்வு எனில், நபிமார்களில் எந்தவொரு நபியின் வாழ்விலும் அதற்கு இணையான ஒன்றை பார்க்க முடியாது. அசல் விஷயம் என்னவென்றால், எதுவரை மனிதன் தனது ஆசைகள் மற்றும் நோக்கங்களை விட்டுப் பிரிந்து இறைவனிடம் வரவில்லையோ அதுவரை அவர் எதனையும் பெறுவதில்லை. இன்னும் சொல்வதாயின், அவர் தமக்கே இழப்பை ஏற்படுத்திக் கொள்கிறார். அவர் தமது எல்லா மன ஆசைகள் மற்றும் நோக்கங்களை விட்டும் தனித்து வெறும் கையுடன் தூய்மையான உள்ளத்துடன் இறைவனின் முன் செல்வார் எனில் இறைவன் அவருக்கு வழங்குகின்றான். இறைவன் அவருக்கு வழிகாட்டுகின்றான். ஆனால் நிபந்தனை என்னவென்றால், மனிதன் மரணிக்க தயாராகி விட வேண்டும். அவனது வழியில் இழிவு மற்றும் மரணத்தை வரவேற்பவராக ஆகி விட வேண்டும்.

அவர்கள் கூறுகிறார்கள்: பாருங்கள்! உலகம் அழியக்கூடிய ஒன்றாகும். நிரந்தரமாக இதில் எவரும் இருக்க மாட்டார். ஆனால், இறைவனுக்காக அதனை விட்டு விடுபவருக்கே அதன் இன்பம் கிடைக்கின்றது. இதன் காரணமாக அம்மனிதர் இறைவனது நெருக்கத்திற்குரியவராக ஆகிறார். இறைவன் அவருக்காக உலகை ஏற்கச் செய்கிறான். அவர் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதை உலகில் பரப்பி விடுகின்றான். அதுவும் எத்தகைய ஏற்புடைமையை அவருக்கு வழங்குகிறான் எனில், அதை பெறுவதற்காக உலகவாதிகள் எவ்வளவு முயல்கின்றனர் என்றால், ஏதாவது பட்டம் கிடைக்க வேண்டும் அல்லது கண்ணியத்திற்குரிய இடத்தில் அரசவையில் இடம் கிடைக்க வேண்டும். அரசவையில் அமர்பவர்களில் தம் பெயரும் எழுதப்பட வேண்டும் என்று நினைக்கின்றனர். ஆக உலகின் எல்லா கண்ணியங்களும் அவருக்கு வழங்கப்படுகிறது. எவர் இறைவனுக்காக எல்லாவற்றையும் விட்டு விடவும், இழக்கவும் ஆயத்தமாகி விடுவாரோ ஆயத்தமாக இருப்பது மட்டுமல்லாமல் உலகை விட்டு விடவும் செய்வாரோ அப்படிப்பட்டவருக்காக எல்லா உள்ளங்களிலும் ஏற்புத்தன்மையும் கண்ணியமும் இடப்படுகின்றது.

சுருக்கமாக, இறைவனுக்காக எல்லாவற்றை –யும் இழந்தவருக்கு எல்லாம் தரப்படுகிறது. ஒரு சபையிலிருந்தவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் இதனை கூறிக் கொண்டிருந்தார்கள். இன்னோர் அறிவிப்பு இவ்வாறு வருகிறது. அப்போது அன்னார் கூறினார்கள்: உலகியல் அரசுகளுக்காக ஒருவர் சிலவற்றை இழந்தாலும் அவருக்கு அதற்காக கூலி கிடைக்கிறது. உலகத்தில் பாருங்கள்! நீங்கள் ஏதாவது செய்தால் அதற்காக பலன் கிடைக்கிறது. அவ்வாறிருக்க நீங்கள் இறைவனுக்காக இழந்தால் அதற்கான கூலி கிடைக்காதா?

அவர்கள் கூறுகின்றார்கள்: இறை வழியில் அவர் கொடுத்ததை விட பன்மடங்கு அதிகமாக

பெறாத வரை அவர்கள் மரணிப்பதில்லை. இறைவன் எவரது கடனையும் தனது பொறுப்பில் வைத்துக் கொள்வதில்லை. ஆனால், இதனை ஏற்பவர் இதனைப் பற்றி தெரிந்தவர் மிகவும் குறைவாகவே உள்ளனர் என்பதே வருத்தத்திற்கியதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 398-399 அடிக்குறிப்புடன். 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இந்த உண்மை, பற்று, களங்கமின்மை மற்றும் நன்றியுணர்வை கடைபிடித்தவர்களின் முன்மாதிரி நமக்கு எந்த அளவுக்கு மகிமையுடன் தென்படுகிறது எனில் அதைக் கண்டு மனிதன் வியந்து போகின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தூய்மையாக்கும் ஆற்றல் அவர்களின் நேசத்தின் திசையை மட்டும் மாற்றவில்லை. முதலில் அவர்களின் நேசம் வேறு பக்கம் இருந்தது. அதனை இன்னொரு பக்கம் அன்னார் திருப்பினார்கள். அதாவது உலகை விட்டு இறைவன் பக்கம் திருப்பினார்கள். மாறாக, அந்த அன்பின் தரத்தை எவ்வளவு உயர்த்தினார்கள் என்றால், அதற்கு ஓர் ஈடிணை உலகில் முன்னர் கிடைக்கவே இல்லை.

இந்த மேன்மை தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எவ்வளவு அழகான முறையில் உதாரணம் தந்து விளக்குகிறார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்களின் அன்பின் தரம், தியாகம் ஆகியவற்றிற்கான உதாரணம் முற்கால நபிமார்களின் வாழ்வில் கூட காணப்பட்டதில்லை. நபிமார்களை ஏற்றுக் கொண்டவர்களை எடுத்துக் கொண்டால் அதன் மகிமை பற்றி என்ன கூற முடியும்? அந்த நபிமார்களின் சஹாபாக்களின் நிலைமையே மிகவும் கீழ் நிலையில் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களோ எல்லா மன எழுச்சிகளிலிருந்தும் தூய்மையாக இருந்தார்கள். தூய உள்ளத்துடன் அல்லாஹ்வுக்-காக களங்கமற்ற நிலையில் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக மட்டுமே வாழ்வைக் கழிப்பவர்களாக அவர்கள் இருந்தனர். இந்த நிலையில் இருந்ததால் இறைவனும் அவர்களுக்கு தனது அருளை வழங்குகிறான். அளவில்லாமல் வழங்குகிறான். நாம் சஹாபாக்களின் வாழ்வில் இதனை பார்க்கிறோம்.

சஹாபாக்கள் எவ்வாறு தங்களை இறைவனுக்குக் கீழ் கொண்டு வந்தார்கள் என்று காட்டுவதற்காக சில சஹாபாக்களின் வாழ்வில் நடந்த சம்பவங்களை எடுத்து வைக்கிறேன். அவர்கள் என்ன முன்மாதிரியைக் காட்டினார்கள் என்று எடுத்துக் கூறுவேன்.

ஹஸ்ரத் அப்பாது பின் பஷர் என்று ஓர் அன்ஸாரி சஹாபி இருந்தார். இளமைக் காலத்தில் தமது **35** வயதில் அவருக்கு ஷஹாதத் கிடைத்தது. (அஸதுல் காபா ஃபி மஃரிபதி அஸ்ஹாபிஹி தொகுதி 3 பக்கம் 46 அப்பாது பின் பஷர். பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் 2003 -ல் அச்சிடப்பட்டது)

அவரது இறை வணக்கம் மற்றும் திருக்குர்ஆன் ஓதுதல் எவ்வாறிருந்தது என்பதை காட்டும் ஒரு சம்பவத்தைக் கூறியவாறு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி அவர்கள் கூறினார்கள்: ஓர் இரவு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுவதற்காக எழுந்தார்கள். மஸ்ஜிதில் இருந்து திருக்குர்ஆன் ஓதும் சப்தம் வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுவதற்காக மிகவும் சீக்கிரம் எழக் கூடியவர்களாக இருந்தார்கள். அன்னார் எழுந்து இந்த குரல் அபாது உடைய குரலா? என்று கேட்டார்கள். அவர் குரல் மாதிரிதான் தெரிகிறது என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) கூறினார்கள். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வே! அப்பாது மீது கருணை காட்டுவாயாக என்று அவருக்காக துஆ செய்தார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுஷ் ஷஹாதத் பாபு ஷஹாதத் ஹதீஸ் 2655)

இவர்கள் எத்தனை நற்பேறு பெற்றவர்கள். அவர்கள் திருக்குர்ஆன் ஓதுவதில் தமது இரவைக் கழித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய துஆவை நேரடியாகப் பெறுபவர்-களானார்கள். இரவில் எழுந்து அல்லாஹ்வை திருப்திப்படுத்துவதற்காகவும் அவனது ரஹ்மத்தைப் பெறுவதற்காகவும் அவனை அழைத்தார்கள். ஹஸ்ரத் அப்பாதுக்கு தமது ஒரு கனவின் காரணமாக தமக்கு ஷஹாதத்தின் பதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது.

ஹஸ்ரத் அபூ ஸயீது குத்ரி கூறுகின்றான். ஹஸ்ரத் அப்பாது ஒருமுறை என்னிடம் கூறினார்கள்: நான் கனவில் பார்த்தேன். வானம் பிளக்கிறது. நான் அதற்குள் செல்கிறேன். பிறகு அது ஒன்று சேர்த்து விட்டது. பழைய நிலைக்கு வந்தது. இந்த கனவிலிருந்து அல்லாஹ் எனக்கு ஷஹாதத்தின் பதவியை வழங்குவான் என்ற உறுதி ஏற்பட்டது.

அன்னாரின் இந்த கனவு யமாமா போரில் நிறைவேறியது. அன்னார் மிகவும் வீரத்துடன் போரிட்டவாறு ஷஹாதத்தைப் பெற்றார்கள். எதிரிகளுடன் போரிட்டதன் மூலம் அன்னாருடன் படையில் இருந்த எல்லா அன்ஸார் சஹாபாக்களுக்கும் வெற்றி கிடைத்தது. ஆனால் அவர்கள் சஹீதானார்கள். ஆனால், எதிரிகளின் மீது வெற்றி பெற்றார்கள்.

அபூ ஸயீது கூறுகிறார்: போருக்குப் பிறகு அன்னாரது முகம் வாள் காயங்களால் அடையாளம் கண்டறிய முடியாதவாறு ஆகி விட்டது. அவரது சடலம் அன்னாரது உடலிலுள்ள ஓர் அடையாளத்தை வைத்து அடையாளம் கண்டு கொள்ளப்பட்டது. (அத்திபுகாதுல் குப்ரா லிஇப்னு சஅத் என்ற நூலின் மொழியாக்கம் தொகுதி 4 பக்கம் 31)

பிறகு, வரலாறு நமக்கு இன்னொரு சஹாபி பற்றி கூறுகிறது. அவர் பெயர் ஹராம் பின் மல்ஹான் ஆகும். இந்த இளைஞர், இளைஞர்-களுக்கும் மற்றவர்களுக்கும் குர்ஆன் கற்றுக் கொடுப்பதற்கும் ஏழைகளுக்கும் திண்ணைத் தோழர்களுக்கும் பணிவிடை செய்வதற்கும் முன் நிற்பவராக இருந்தார்.

பனூ ஆமிரின் ஒரு குழு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் தமது மக்களுக்கு தப்லீக் செய்வதற்காக சிறு குழுவை அனுப்புமாறு கேட்டது. அதன் மூலம் நாங்கள் இஸ்லாம் பற்றி தெரிந்து கொள்கிறோம். அதன் மூலம் எங்கள் மக்கள் இஸ்லாத்தை தழுவுவதற்காக அவர்களை எங்களிடம் அனுப்புங்கள் என்றனர். இவர்களின் எண்ணம் அந்த நேரத்திலும் தீயதாக இருந்தது. எந்நிலையிலும் அவர்கள் இவ்வாறு கோரிக்கை வைத்தனர். இவர்கள் நம்பத்தகுந்தவர்களாக இருக்கவில்லை. எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நாம் அனுப்பினால் உங்களால் அவர்களுக்கு எதுவும் இழப்பு ஏற்படும் என்ற ஆபத்து உள்ளது என்று கூறினார்கள். அவர்களின் தலைவர் இதுவரை முஸ்லிம் ஆகவும் இல்லை. நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். எனது அடைக்கலத்தில் வரக்கூடியவர்களாக அவர்கள் இருப்பார்கள்; அவர்கள் அனைவரும் எனது பாதுகாப்பில் இருப்பர் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு குழுவை பனூ ஆமிரிடம் அனுப்பினார்கள். ஹராம் பின் மல்ஹானை அக்குழுவின் தலைவராக அன்னார் நியமித்தார்கள். அந்த குழு அங்கு சென்றதும் ஹஸ்ரத் ஹராம் பின் மல்ஹானுக்கு ஏதோ பிரச்சனை இருக்கும் என்ற சந்தேகம் எழுந்தது. அவர்களின் வழிமுறை அவர்களுக்கு சரியாகத் தோன்றவில்லை. அம்மக்களது எண்ணம் தூயதாக இருக்கவில்லை என்பது தூரத்திலிருந்த அவர்களுக்கு தெரிந்து விட்டது.

எனவே, அன்னார் தம்முடன் இருந்தவர்-களிடம், கூறினார்கள்: எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எல்லாரும் ஒன்றாக அங்கு போகக் கூடாது. எல்லாரையும் அவர்கள் சூழ்ந்து கொண்டால் ஒரே நேரத்தில் அனைவருக்கும் நஷ்டம் இழைத்து விடலாம். எனவே, நீங்கள் எல்லாரும் இங்கிருங்கள். நானும், என்னுடன் ஒருவர் மட்டும் போகிறோம். எங்களுடன் அவர்கள் நன்றாக நடந்து கொண்டால் நீங்களும் வாருங்கள். எங்களுக்கு அவர்கள் தீங்கிழைத்தால் அடுத்து என்ன செய்ய வேண்டும்? என்று நீங்கள் நிலைமைகளுக்கு ஏற்ப முடிவு செய்யுங்கள். திரும்பிச் செல்வதா? அல்லது இவர்களுடன் சண்டையிடுவதா? அங்கு தங்குவதா? என்று நிலைமைக்கு ஏற்ப நீங்கள் முடிவு செய்து கொள்ளுங்கள். ஹராம் பின் மல்ஹான் மற்றும் அவர்களுடன் ஒருவரும் அம்மக்களை சென்று அடைந்ததும் பனூ ஆமிரின் தலைவர் ஒருவருக்கு சைகை செய்தார். உடனே அம்மனிதன் பின்னால் இருந்து சைகை செய்தார். உடனே அம்மனிதர் பின்னால் இருந்து மல்ஹானை ஈட்டியால் தாக்கினான். அவர்களின் கழுத்தில் இருந்து இரத்தம் கொட்டியது. அன்னார் அதனை தமது கைகளில் ஏந்தியவாறு, கஅபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் வெற்றி பெற்று விட்டேன். கஅபாவின் இரவின் மீது ஆணையாக! நான்


*குமரி மாவட்டத்தில்*
*இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்*
*பத்ர் வார இதழ் சம்பந்தமாக*
***தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:***
*1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)*
*இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.*
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

வெற்றி பெற்று விட்டேன் என்று கூறினார்கள். பிறகு அவர்களுடன் இருந்த சஹாபியையும் அவர்கள் ஷஹீதாக்கி விட்டனர். பிறகு தொடர்ந்து முறையாக தாக்குதல் நடத்தி அந்த 70 பேர்களையும் ஷஹீதாக்கி விட்டனர். ஒரு சிலர் மட்டுமே தப்பித்னர். இவர்கள் ஏமாற்றப்பட்டு அநியாயமாக ஷஹீதாக்கப்படும்போது அவர்கள், அல்லாஹ்வே! எங்களது தியாகத்தை ஏற்றுக் கொள்வாயாக. எங்களது இந்த நிலைமையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தெரிவித்து விடுவாயாக. ஏனெனில் இங்கிருந்து செய்தியைத் தெரிவிக்க வழியில்லை என்று துஆ செய்தனர். எனவே அல்லாஹ் ஹஸ்ரத் ஜிப்ரீல் மூலமாக அந்த சஹாபாக்களின் ஸலாத்தை பெருமானார் (ஸல்) அவர்களிடம் கொண்டு சேர்த்தான். ஜிப்ரீல் (அலை) அவர்களின் ஷஹாதத் செய்தியையும் தெரிவித்து விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாகளுக்கு அந்த செய்தியைத் தெரிவித்து விட்டார்கள். நான் கூறியது போன்று, 70 சஹாபாக்களும் ஷஹீதாக்கப்பட்டு விட்டனர் என்று தெரிவித்தார்கள். இந்த ஷஹாதத்தினால் பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் துக்கம் அடைந்தார்கள். அன்னார் 30 நாட்கள் வரை அந்த கோத்திரத்தாருக்கு எதிராக துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! இந்த அநீதி இழைத்தவர்களை நீயே பிடிப்பாயாக என்று துஆ செய்தார்கள். இந்த ஷஹாதத்துகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகப்பெரும் ஷஹாதத் என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுல் மகாஸி பாபு கஸ்வதுர் ரபீஹ் ஹதீஸ் எண்: 4091)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அம்மக்களின் அன்பு, நேசம், மார்க்கத்திற்காக அவர்கள் செய்த தியாகம் பற்றி குறிப்பிடும்போது ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: அன்பு எத்தகைய ஒரு பொருள் எனில் அது எல்லாவற்றையும் செய்ய வைக்கிறது. ஒரு மனிதர், ஒருவர் மீது நேசம் கொள்கிறார் என்றால் தான் நேசித்த அம்மனிதருக்காக என்னவெல்லாம் செய்கிறார்?

அன்னார் உலகவாதிகளின் ஓர் உதாரணத்தை கூறுகிறார்கள்: ஒரு பெண்ணுக்கு ஒருவர் மீது நேசம் ஏற்பட்டது. அந்தப் பெண்ணை மற்றவர்கள் இழுத்து வந்து, பல்வேறு துன்பங்களை அவளுக்கு தந்தனர். அவள் அடியும் வாங்கினாள். ஆனால் பிறகும் கூட எனக்கு இன்பம் கிடைக்கிறது எனக் கூறினாள். பொய்யான அன்பு, பாவம் மற்றும் கட்டுப்பாடாமையின் விளைவாக உருவான அன்புக்காக ஒருவர் கஷ்டங்களை அனுபவிக்கும்போது கூட அவருக்கு அதில் ஓர் இன்பம் இருக்கும் எனில், இது உலகியல்வாதிகளின் நிலைதான். பிறகு சிந்தித்துப் பாருங்கள். ஒருவர் இறைவனின் அன்புக்காக கஷ்டப்பட்டால், அவனது சந்நிதியில் தன்னை அர்ப்பணிக்க விரும்பினால் அவர் அதற்காக அனுபவிக்கிற கஷ்டங்களில் எந்த அளவு இன்பத்தைப் பெற முடியும்?

அவர்கள் கூறுகின்றார்கள்: எல்லா சஹாபாக்களுக்கும் (ரிழ்வானுல்லாஹி அலைஹிம்) உடைய நிலைமைகளைப் பாருங்கள். அவர்களுக்கு என்னென்ன கஷ்டங்களெல்லாம் மக்காவில் இருந்தன. சிலர் பிடிக்கப்பட்டனர். விதவிதமான கஷ்டங்களுக்கு ஆளாகினர். ஆண்கள் ஒரு பக்கம் இருக்கட்டும். பெண்களுக்குக் கூட என்னென்ன கடுமைகள் காட்டப்பட்டன. அதனை நினைக்கும் போது உடல் நடுங்கி விடுகிறது. அவர்கள் மக்காவாசிகளைச் சந்திக்கும்போது வெளிப்படையில் மிகவும் மரியாதை கொடுத்தனர். ஏனெனில் அவர்கள் அவர்களின் உறவினர்கள்தான். பிறகு எந்த விஷயம் இந்த அளவுக்கு கஷ்டங்களைச் சகித்த பிறகும் கூட அவர்களை உண்மையில் நிலைத்து நிற்கச் செய்தது? அந்த இன்பம் மற்றும் ஆனந்தத்தின் நீரூற்றுதான் உண்மையின் மீது கொண்ட நேசத்தின் காரணத்தால் அவர்களின் நெஞ்சிலிருந்து வெளி வந்தது.

பிறகு அன்னார் ஒரு சம்பவத்தை உதாரணமாக எடுத்துக் கூறினார்கள்: ஒரு சஹாபி தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது. அவரது கை வெட்டப்பட்டது. அப்போது அவர்கள் நான் உளூ செய்கிறேன் என்று கூறினார்கள். தலை வெட்டப்பட்ட போது நான் சஜ்தா செய்கிறேன் என்று கூறினார்கள். இதனைக் கூறி விட்டு அவர் இறந்து விட்டார் என்று கடைசியில் எழுதப்பட்டுள்ளது. அவர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிவித்து விடுவாயாக என்று துஆ செய்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்போது மதீனாவில் இருந்தார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்கள் சென்று அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். அன்னார் வ அலைக்கும் ஸலாம் என்று கூறினார்கள். அவர்களுக்கு இந்த சம்பவம் குறித்து தகவல் தெரிய வந்தது. பிறகு கூறுகின்றார்கள்: இறைவனிடம் கிடைக்கும் இன்பம் எத்தகையது என்றால் அதற்காக ஒரு புழுவைப் போன்று நசுங்கி சாவதற்கு கூட அவர்கள் சம்மதித்தார்கள். அந்த சஹாபி கஅபாவின் இறைவனை பெற்று விட்டேன் என்று கூறியது போன்று அது அளவற்ற நேசத்தின் உச்சநிலையாக இருந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: கடுமையிலும் கடுமையான கஷ்டம் கூட ஒரு நம்பிக்கை கொண்டவருக்கு எளிதாகவே தென்படுகிறது. உண்மையாகக் கேளுங்கள். ஒரு நம்பிக்கையாளரின் அடையாளமும் அதுதான். அவர் கொல்லப்படுவதற்கும் தயாராக இருக்கிறார். அதுபோன்று ஒரு மனிதருக்கு நீர் கிறித்தவர் ஆகி விடு அல்லது கொலை செய்யப்படுவாய் என்று கூறப்பட்டால் அவரது நஃப்ஸிடமிருந்து என்ன ஓசை எழுகிறது எனப் பார்க்க வேண்டும். அவர் மரணிப்பதற்காக தலையை வைப்பாரா? அல்லது கிறித்தவராவதற்கு முன்னுரிமை வழங்குவாரா? அவர் மரணிப்பதற்கு முன்னுரிமை வழங்கினால் அவர் உண்மையான முஃமின் ஆவார். அவ்வாறில்லாமல் கிறித்தவராக ஆவதற்கு முன்னுரிமை வழங்குபவராக இருந்தால் அவர் காஃபிராகி விடுகின்றார் என்று கூறினார்கள். ஆகவே இதுபோன்ற துன்பங்கள் முஃமினுக்கு வருகின்றன. உள்ளுக்குள்ளேயே அதில் ஓர் இன்பம் இருக்கிறது. சிந்தித்துப் பாருங்கள். அதில் ஓர் இன்பம் இல்லையென்றால் நபிமார்கள் நீண்ட காலம் அந்த கஷ்டத்தை எப்படி அனுபவித்தனர்?

(மல்.'.பூஸாத் தொகுதி 2 பக்கம் 308-309; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடிக்கப்பட்டது)

இங்கு சஹாபாக்களின் அன்பின் முன்னுதாரணத்திற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தூய்மையாக்கும் ஆற்றல் எத்தகைய ஆன்மாவை ஊதியது என்றால், சஹாபாக்களின் மீது அவர்கள் மரணிக்கும்போது கூட நாம் கேட்டது போன்று கஅபாவுடைய இறைவன் மீது ஆணையாக! நாங்கள் வெற்றி பெற்று விட்டோம்; நாங்கள் இறைவனை பெற்று விட்டோம் என்று கூறினர். இவர்கள் நன்மை செய்பவர்கள் ஆவர். இவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டது. அந்த அநீதிக்கு ஆளாகி அவர்கள் தியாகம் செய்தனர். அவர்கள் தாமே அநீதியிழைத்து விட்டு, தற்காலத்தில் சிலர் கூறுவது போன்று நாங்கள் ஷஹீதாகிறோம். ஷஹீதாவோம். சுவரக்கத்திற்கு சென்று விடுவோம் என்று கூறுகின்ற மக்கள் அல்ல மாறாக, சஹாபாக்கள் அநீதிக்கு எதிராக யுத்தம் செய்பவர்களாக இருந்தனர். அநீதியிழைப்பவர்களாகவும் அநீதியை பரப்புபவர்களாகவும் இருக்கவில்லை.

அடுத்து அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்கள் ஓர் அன்ஸாரி சஹாபி ஆவார்கள். இவர்களைப் பற்றி இவ்வாறு அறிவிப்பு வருகிறது. இவர் உஹது யுத்தத்திற்குச் செல்லும்போது தனது மகனிடம் கூறினார்: எல்லாருக்கும் முதலில் எனக்கு ஷஹாதத் கிடைக்கும். ஒருவேளை அதனை அவர் கனவில் கண்டிருக்கலாம் அல்லது இறைவன் கூறியிருக்கலாம். அவர்கள், எனது மரணத்திற்குப் பிறகு நீர் உமது சகோதரிகளை கவனித்துக் கொள்ள வேண்டும். அவருக்கு பெண் மக்கள் இருந்தனர். ஒரு யூதரிடமிருந்து நான் கடன் வாங்கியுள்ளேன். எனது கடனை எனது பேரீத்தம்பழத் தோட்டத்திலிருந்து வரும் வருமானத்தில் இருந்து திரும்ப செலுத்த வேண்டும் என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுல் ஜனாயிஸ் பாபு ஹல் யஹருஜுல் மய்யிது மினல் கப்ரி வல்லஹதி லிஇல்லதிஹி ஹதீஸ் 1351)

இதுவே அல்லாஹ்வின் மீது அன்பும் தக்வாவும் தூய்மையும் உரிமைகளை வழங்குதலும் உடைய தரமாகும். யுத்தத்துக்குச் செல்கிறார்கள். உயிரை பொருட்படுத்தவில்லை. நான் ஷஹீதாக்கப்படுபவர்களில் முதல் ஆள் என்பதில்

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

**276, N.H. Road, Coimbatore - 641 001.**

அவர்களுக்கு மகிழ்ச்சி இருந்தது. எனக்கு வயதுக்கு வந்த பெண் மக்கள் உள்ளனரே! அவர்களின் உரிமைகளை தர வேண்டுமே என்ற கவலை இல்லை. அந்த உரிமைகளை தருவதற்கு அல்லாஹ்வின் மீது பொறுப்பு சாட்டுகிறார்கள். பிறகு மகனுக்கு போதனை செய்கிறார்கள். நீர் வீட்டின் பெரிய ஆளாக இருந்து இதனை செய்ய வேண்டும். சகோதரிகளை கவனிக்க வேண்டும் என்று கூறுகின்றார்கள். பிறகு கடனைத் தர வேண்டும் என்ற கவலை உள்ளது. யூதனிடம் கடன் வாங்குகிறார்கள். அதனை நீயே அடைத்து விடு என்று கூறவில்லை. மாறாக, தோட்டத்தில் இருந்து வருகிற வருமானத்தில் இருந்து அதனை இன்ஷா அல்லாஹ் செலுத்த முடியும் என்று கூறினார்கள். உம்மீது அந்த சுமையை வைக்கவில்லை என்று கூறுகிறார்கள். எனினும் ஓர் இஸ்லாமிய கடமையை உமக்கு கவனமூட்டுகிறேன். அது என்னவெனில் கடனை கண்டிப்பாக திரும்ப செலுத்த வேண்டும். கடனை கொடுத்த பிறகுதான் எனது சொத்துக்கு நீர் வாரிசாக முடியும் என்றார்கள். முதல் கடமை கடனை செலுத்துவதாகும். ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களுடைய ஷஹாதத் மற்றும் அவர்களது தியாகம் எவ்வாறு இருந்தது அல்லாஹ் எவ்வாறு அருள் புரிந்தான் என்பது பற்றி இவ்வாறு அறிவிப்பில் வருகிறது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் உடைய மகன் கவலையுடன் இருப்பதைப் பார்த்த அவரது தந்தைக்காக இரங்கல் தெரிவித்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் உமக்கு ஒரு சந்தோஷமான செய்தியை கூறுகிறேன். அல்லாஹ் உமது தந்தையை தன் அருகில் அமர்த்தினான். ஷஹாதத்துக்குப் பிறகு நீர் என்ன விரும்புகிறீர் என்பதனை கேளுங்கள் நான் தருகிறேன் என்று இறைவன் கூறினான். உமது தந்தை கூறினார். இறைவா நான் அடியானாக இருப்பதற்குரிய உரிமையை செலுத்தவில்லை. உன்னிடம் எந்த முகத்துடன் நான் கேட்பேன்? அவர்களின் தியாகத்தின் தரம், இறை வணக்கத்தின் தரம் எவ்வாறு இருந்தது? இருந்தும் இறைவா நான் ஓர் அடியானாக இருப்பதன் உரிமையை செலுத்தவில்லை என்று கூறினார்கள். எந்த முகத்தோடு நான் கேட்பேன் என்றார்கள். உனது அருளினால் நீ வழங்குவாயாக. அல்லாஹ்வே நான் எனது விருப்பத்தை கூறியே ஆக வேண்டும் எனில் எனது விருப்பம் என்னை உலகிற்கு மீண்டும் அனுப்புவாயாக. நான் மீண்டும் உனது நபியுடன் சேர்ந்து எதிரிகளுடன் சண்டை இடுவேன். பிறகு ஷஹீதாகி வருவேன் என்பதேயாகும் என்றார்கள். அல்லாஹ் கூறினான்: நான் ஒருவருக்கு மரணத்தை கொடுத்து விட்டால் அவர்களை மீண்டும் உலகிற்கு அனுப்புவதில்லை என்று முடிவு செய்து விட்டேன். எனவே உம்முடைய அந்த ஆசை நிறைவேற முடியாது என்றான். (மஜ்மஉஸ் ஸவாயித் தொகுதி 9 பக்கம் 399 ஹதீஸ் 15756. கிதாபுல் மனாகிபு பாபு ஃபீ அப்துல்லாஹ் பின் உமர்)

பிறகு அல்லாஹ் விரும்பிய நிலையில் அவருக்கு ஷஹீதுடைய அந்தஸ்தும் வழங்கப்படும் என்று கூறினார்கள். பிறகு இன்னொரு சஹாபியான அம்ர் பின் ஜமூஹ் அவர்களின் உணர்வு மற்றும் ஷஹாதத் பற்றி வருகிறது. அவர் தனது காலில் இருந்த கஷ்டத்தினால் நொண்டி நொண்டி நடந்து கொண்டிருந்தார். எனவே அவரது மகன்கள் அவரது இயலாமை காரணத்தால் பத்ர் போரில் கலந்து கொள்ள அவருக்கு அனுமதிக்கவில்லை. பிறகு உஹது போர்க்களத்தில் வாய்ப்பு வந்தது. காஃபிர் முஸ்லிம்கள் மீது தாக்குவதற்காக வந்தனர். அப்போது இவர் தனது மகன்களிடம் கூறினார். நீங்கள் என்னவேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். நீங்கள் கூறுவதை நான் கேட்கப் போவதில்லை. இந்தபோரில் நான் கண்டிப்பாக கலந்து கொள்ளவே செய்வேன் என்றார். இந்த வகையில் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, எனது காலின் கஷ்டம் காரணத்தால் யுத்தத்தில் கலந்து கொள்வதில் இருந்து எனது மகன்கள் என்னை தடுக்கின்றனர். ஆனால் நான் உங்களுடன் இந்த போரில் கலந்து கொள்ள விரும்புகிறேன். இறைவன் மீது ஆணையாக எனது உள்ளத்து ஆசையை அல்லாஹ் நிறைவேற்றுவான் என்று நம்புகிறேன். அல்லாஹ் எனக்கு ஷஹாதத்தை வழங்குவான். நான் எனது நொண்டி காலின் காரணமாக சொர்க்கத்தில் நுழைவேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஊனத்தின் காரணத்தால் உம்மீது ஜிஹாத் கடமையில்லை. ஆனால் இது உமது விருப்பமாக இருக்கும் எனில் நீர் கலந்து கொள்ளும் என்றார்கள். அவரது மகன்களிடம், இவரை கலந்து கொள்ள விடுங்கள் என்று கூறினார்கள். இந்த வகையில் ஹஸ்ரத் அம்ர் யுத்தத்தில் கலந்து கொண்டார்கள். அல்லாஹ்வே! எனக்கு ஷஹாதத் வழங்குவாயாக என்று துஆ செய்தார்கள். என்னை இயலாதவனாக தோற்றவனாக வீட்டுக்கு திரும்ப வைக்காதே என்று துஆ செய்தார்கள். பிறகு இவரது விருப்பம் யதார்த்தத்தில் நிறைவேறியது. அவர் உஹது மைதானத்தில் ஷஹீது ஆனார். (அஸதுல் கஅபா தொகுதி 7 பக்கம் 688-689 மொழியாக்கம்)

இம்மக்கள்தான் முன்னேறிச் சென்றவர்கள் ஆவர். நிச்சய உறுதியில் மேம்பட்டவர்கள். எந்த ஒரு சஹாபியின் சம்பவத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் களங்கமின்மை, பற்று, இறைவனுக்காக அர்ப்பணித்தல் ஆகியவற்றை வெளிப்படுத்த எப்போதும் தயாராக இருந்தனர். ஹஸ்ரத் அபூ தல்ஹா ஓர் அன்ஸாரி சஹாபி இவர் அம்பு எறிவதில் புகழ் பெற்றவராக இருந்தார். இவர் பத்ர் போரில் அம்பு எய்திவதில் தமது திறமையை வெளிப்படுத்தினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுல் மனாகிப் பாபு மனாகிபு அபீ தல்ஹா அன்ஸாரி (ரலி) ஹதீஸ் 3811. சஹீஹ் புகாரி. கிதாபுல் மகாஸி பாபு அஸ்ஹிமதுத்தல்ஹா கஃப்பான் ஹதீஸ் 4064)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்: அபூ தல்ஹாவின் முன் அம்புகளை போடுங்கள். ஏனெனில் அவர் மிகவும் வேகமாக அம்பு விடுபவராக இருந்தார். அவர் குறி பார்த்து எறிவதில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். உஹது போரில் ஹஸ்ரத் அபூ தல்ஹாவுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன் கேடயமாக நிற்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் தமது கைகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முகத்தின் முன் வைத்துக் கொண்டு நின்ற அன்ஸாரி சஹாபி ஆவார். இவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) முன்னால் நின்றவாறு மிகவும் தைரியத்துடன் தனது வீரத்தை வெளிப்படுத்தும் வாய்ப்பு கிடைத்தது. (சஹீஹ் புகாரி. கிதாபுல் மனாகிப் பாபு மனாகிபு அபீ தல்ஹா அன்ஸாரி (ரலி) ஹதீஸ் 3811)

பயமின்றி மிகவும் ஆபத்தான இடத்தில் நிற்பதற்கு முன்னுரிமை தருபவராக அவர்கள் இருந்தார்கள். எனவே இஸ்லாத்தை அழிக்க நினைத்த எதிரிகளுக்கு எதிராக அவர்கள் நின்றார்கள். அநீதி இழைப்பதற்காக சண்டை இடவில்லை. மாறாக எதிரிகள் தாக்கியபோது கோழைத்தனம் காட்டாமல் வீரத்துடன் முன் நின்றார்கள். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக தமது எல்லா திறமைகளையும் பயன்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தரப்பிலிருந்து தெரிய வருவது, அவ்வாறே நடக்கிறது. காரணிகள் ஒரு பொருட்டே அல்ல. அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் என் வழியில் செல்லும் போது முராகமன் கஸீராவை அதாவது மிகுதியான அடைக்கலத்தை பெறுவீர்கள். (4:101) உண்மையான எண்ணத்துடன் அடி எடுத்து வைப்பவருடன் இறைவன் இருப்பான். மனிதன் நோயுற்றால் அவரது நோய் அகன்று விடுகிறது.

சஹாபாக்களிடம் ஏற்பட்டுள்ள மாற்றத்தைப் பாருங்கள். சஹாபாக்களைப் பாருங்கள். உண்மையில் சஹாபாக்களின் நிலை எத்தகையது எனில், எல்லா நபிமார்களின் நிலைக்கு ஒப்பானதாக அது இருக்கின்றது. அல்லாஹ்வுக்கு செயல்தான் பிடித்தமானது. அவர்கள் ஆடுகளைப் போன்று தமது உயிரைத் தந்தனர். அவர்களின் உதாரணம் எத்தகையது எனில் நுபுவ்வத்தின் மகத்துவம் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களிடம் இருந்து ஆரம்பிக்கிறது என்று நம்முடைய மார்க்க நூல்களில் இருந்து தெரிய வருகிறது. ஆனால் சஹாபாக்கள் அதனை ஒளிமிக்கதாக மின்ன வைத்துக் காட்டினார்கள். அதன் அறிவுத் தகுதியை மட்டும் அவர்கள் காட்டவில்லை. மாறாக தமது செயல் மூலம் அதனை மின்னச் செய்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: பற்று மற்றும் உண்மை என்றால் என்னவென்று காட்டினார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய நிலையை கேட்காதீர்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை ஒருவரும் விற்று விடவில்லை. ஆனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை அவரது சீடர்கள் 30 ரூபாய்களை பெற்றுக் கொண்டு விற்று விட்டனர்.

திருக்குர்ஆனில் இருந்து நிரூபணமாவது என்னவென்றால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய சீடர்களுக்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் உண்மையின் மீது சந்தேகம் இருந்தது. அதனால் தான் உணவுத்தட்டு கேட்டனர். வ நஃலமு அன்கஸ் ஸதக்தனா அதாவது, நீர் உண்மையாளர் அல்லது பொய்யர் என்பது இதன் மூலம் நிரூபிக்கப்பட்டு விடும்

என்றனர். உணவுத்தட்டு இறங்கும் வரை அவர்களின் நிலை னஅஃலமு அதாவது உண்மையைத் தெரிந்ததாக இருந்ததில்லை. பிறகு எந்த அளவு நிம்மதியற்று வாழ்ந்தார்கள் எனில் அதற்கு முன் உதாரணமே இல்லை.

ஆனால் கண்ணியத்துக்குரிய சஹாபாக்களின் கூட்டம் மிகவும் வியக்கத்தகு கூட்டம் ஆகும். அது மதிப்பிற்குரியதும், பின்பற்றத்தக்கதும் ஆகும். அவர்களின் உள்ளம் திட உறுதியினால் நிறைந்து இருந்தது. திட உறுதி இருந்தால் பிறகு உள்ளம் பொருளை தர விரும்புகிறது. பிறகு அதிகரிக்கும் போது அந்த நிச்சய உறுதியை பெற்றவர் இறைவனுக்காக உயிரை தரவும் தயாராகி விடுகின்றார். (மல்∴பூஸாத் தொகுதி 5 பக்கம் 42; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இந்த யகீன் (நிச்சய உறுதி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தூய்மையாக்கும் ஆற்றலின் காரணத்தால் எப்போதும் அதிகமாகிக் கொண்டே சென்றது. அந்த சஹாபாக்களின் அன்றாட விவகாரங்களில் கூட ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அவர்கள் வைத்திருந்த பேரன்பின் காட்சிகளைப் பார்க்க முடிந்தது. நமது அன்பை வெளிப்படுத்த என்ன வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்து முயற்சி செய்து அந்த அன்பை அவர்கள் வெளிப்படுத்தினர்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பற்றி வருகிறது. அவர் எப்போதும் சதாரண நிலையிலும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு, நேசத்தை வெளிப்படுத்தி வந்தார்கள். அறிவிப்பில் வருகிறது: அவர்கள் அன்னாரது மகன் ஹஸ்ரத் ஜாஃபர் அவர்களின் கையில் வீட்டில் செய்த இனிப்பு பொருளைக் கொடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொடுக்கச் சொன்னார். ஜாஃபர் அவர்கள் திரும்பி வந்ததும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏதாவது கூறினார்களா? என்று கேட்டார்கள். அவர் கூறினார். ஜாஃபர் மாமிசமா கொண்டு வந்துள்ளீரா? என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள் என்று ஜாஃபர் கூறினார். உடனே அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்கள், எனது எஜமானருக்கு மாமிசம் தேவைபடுகிறதா? என்று கூறியவாறு அப்போது வீட்டில் ஓர் ஆட்டை அறுத்து சமைத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது குடும்பத்திற்காகவும் துஆ செய்தார்கள். (அல் ஜாமிஹ் ஷுஅபுல் ஈமான் தொகுதி 8 பக்கம் 62-63 ஹதீஸ் 5503)

சஹாபாக்களுக்கு ஆரம்ப காலத்தில் நெருங்கிய உறவினர்களிடம் தப்லீக் செய்வதில் பெரும் சிரமம் இருந்தது. மகன் முஸ்லிம் ஆகி தந்தை முஸ்லிமாக இல்லாத காரணத்தால் கஷ்டங்கள் ஏற்படும். அல்லது ஏதாவது பலவீனமானவர் முஸ்லிம் ஆகி இருப்பார்கள். அவரது வலுவான பிற உறவினர்கள் கஷ்டம் தருவர் அல்லது தமது விருப்பமின்மையை வெளிப்படுத்துவர்.

ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூ உடைய மகன் முதலில் முஸ்லிம் ஆகி விட்டார். தந்தை இணை வைப்பவராக இருந்தார். தந்தையாருக்கு தப்லீக் செய்ய வழி தெரியவில்லை. அவர் கூறியதை ஏற்க மாட்டேன் என்றார். பிறகு மகன் ஒரு வழியைக் கண்டுபிடித்தார். தந்தை ஒரு பெரிய சிலையை வீட்டில் அலங்கரித்து வைத்திருந்தார். இவர் அதனை தூக்கி குப்பை பள்ளத்தில் எறிந்து விட்டார். அம்ர் பின் ஜமூ அதனை தேடி எடுத்து வந்து மீண்டும் வீட்டில் வைத்தார். கோபத்துடன் எனது சிலையை இவ்வாறு செய்தவர் யார் என்று தெரிந்தால் அவருக்கு பெரும் தண்டனை கொடுப்பேன் என்றார். மறுநாள் மகன் தனது தந்தை வணங்கி வந்த சிலையை அதேபோன்று மீண்டும் செய்தான். தமது சிலை ஒரு பள்ளத்தில் கிடப்பதை தந்தை பார்த்தார். கடைசியில் ஒருநாள் அம்ர் அந்த சிலையை நன்றாக சுத்தம் செய்து பக்கத்தில் ஒரு வாளை வைத்து விட்டார். அந்த சிலையிடம் கூறினார். உன்னுடன் இப்படி நடந்து கொள்வது யார்? என்று எனக்கு தெரியாது. ஆனால் நான் உன் அருகிலேயே ஒரு வாளை வைத்து விட்டேன். இனி நீயே உன்னை பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற கூறினார். மறுநாள் சிலையை மீண்டும் காணவில்லை. தேடிப் பார்த்தபோது ஒரு குப்பைகளின் குவியலில் ஓர் இறந்த நாயுடன் கட்டப்பட்ட நிலையில் அது கிடந்ததைப் பார்த்த அம்ர் அவர்கள் யோசனையில் ஆழ்ந்தார். நான் இறைவனாக்கி வைத்துள்ள இந்த சிலைக்கு இவ்வளவு தைரியம் கூட இல்லை. அதற்கு அருகில் ஒரு வாள் இருந்தும் தன்னை பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. பிறகு இது என்னை எங்கே காப்பாற்றப் போகிறது? என்று அவர் கருதினார்.

பிறகு அவர் அந்த சிலையைப் பார்த்து கூறினார்கள்: நீ உண்மையான இறைவனாக இருந்தால் நீ நாயின் கழுத்தோடு கட்டப்பட்ட நிலையில் கிடந்திருக்க மாட்டாய். எனவே நான் உயர்ந்த மேலான அல்லாஹ்வை புகழ்கின்றேன். அவனே உணவளிப்பவனும் நீதி வழங்குபவனும் ஆவான். அன்ஸார்களில் எல்லாருக்கும் இறுதியில் இஸ்லாத்தை ஏற்றவர் அம்ர் பின் ஜமூவாக இருந்தார் என்று கூறப்படுகிறது. (அஸதுல் கஅபா தொகுதி 7 பக்கம் 688 மொழியாக்கம்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தமது சஹாபாக்கள் மீது இருந்த அன்பின் காரணமாகவும், அன்னாரின் தூய்மையாக்கும் ஆற்றல் காரணமாகவும் அல்லாஹ் நேரடியாக சஹாபாக்களுக்கு பலவற்றையும் வழங்கினான். சில நேரங்களில் பெருமானார் (ஸல்) அவர்கள் மூலமாகவும் அவை அவர்களுக்கு கிடைத்தன. இதைப் பற்றிக் குறிப்பிடுவதன் மூலமாகவும் சஹபாக்களின் தகுதி மற்றும் அந்தஸ்தை நாம் புரிந்து கொள்ள முடியும்.

ஹஸ்ரத் உபை பின் கஅப் உடைய இறைத் தொடர்பு தனித்துவம் வாய்ந்தது. புகாரியில் ஓர் அறிவிப்பு வருகிறது. ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உன்னிடம் குர்ஆன் ஓதச் சொல்லி கேட்குமாறு இறைவன் என்னிடம் கூறினான் என்றார்கள். ஹஸ்ரத் உபை இப்னு கஅப் வியப்புடன், அல்லாஹ் என் பெயரை கூறினானா? அனைத்துலகிற்கும் எஜமானனாகிய அந்த இறைவனா என் பெயரைச் சொல்லி என் இடம் குர்ஆன் குர்ஆன் ஓதுமாறு கூறினானா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆம்; உம் பெயரைச் சொல்லித்தான் கூறினான். உடனே உபை பின் கஅப் உணர்ச்சிவசப்பட்டு அழுதார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் لَمْ يَكُنِ الَّذِيْنَ كَفَرُوْا என்ற சூராவை அதாவது சூரத்துல் பய்யினாவை ஓதிக் காட்டினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுத் த∴ப்ஸீருல் குர்ஆன் பாபு கல்லா லஇன்லம் யன்தஹி ஹதீஸ் 4960-4961)

ஒருவர் பிறகு உபை பின் கஅப் இடம், நீர் அதனைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து போயிருப்பீரே? என்ற கூறியபோது, அல்லாஹ் உடைய அருள்களைப் பார்த்து அதனை நினைத்து மகிழ்ச்சி அடையுங்கள் என்று இறைவன் கூறுகிறான். பிறகு நான் சந்தோஷமடைய மாட்டேனா? என்று அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் உபை பின் கஅப் குர்ஆனின் புரிதிறன் உள்ளவராக இருந்தார். ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவரிடம் கேட்டார்கள். இதனை நான் முதலிலும் கூறி உள்ளேன். இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்னர் ஒரு குத்பாவில் கூறியுள்ளேன். திருக்குர்ஆனில் எந்த ஒரு வசனம் மிகவும் மகத்தானது என்று கூறுங்கள் என்று கேட்ட போது அல்லாஹ்வும் அவனது ரஸூலும் அறிவார்கள் என்று கூறினார். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) வலியுறுத்திக் கேட்டபோது ஆயத்துல் குர்ஸியைத்தான் மகத்தான ஒரு வசனம் என்று கூறலாம் என்று கூறினார். ஆயத்துல் குர்ஸி தொடர்பாக இந்த அறிவிப்பையும் நான் கூறியிருந்தேன். அதைக் கேட்டவுடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

அன்னார் கூறினார்கள்: அபியே! அல்லாஹ் உமது அறிவை வாழ்த்துக்குரியதாக ஆக்குவானாக. உண்மையில் ஆயத்துல் குர்ஸிதான் திருக்குர்ஆனின் மகத்தான ஒரு வசனமாகும். (சுனன் அபீதாவூது அபுர்ரி பாபு மாஜாஅ ∴பீ ஆயத்துல் குர்ஸி ஹதீஸ் 1460)

இன்னோர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆன வருடம் இவர்களுடன் முழு குர்ஆனையும் ஓதினார்கள். (கன்ஸுல் உம்மால் தொகுதி 13 பக்கம் 266 ஹதீஸ் எண்: 36779)

ஹஸ்ரத் உமர் (ரலி) உடைய அனுமதியுடன் அவர்கள் மக்களுக்கு குர்ஆனின் அறிவைக் கற்றுத் தந்தார்கள். திருக்குர்ஆனுக்கு தஃப்ஸீரும் எழுதினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுஸ் ஸலாத்துத் தராவீஹ். பாபு ∴பஸ்லி மன் காம ரமலான ஹதீஸ் 2010)

இதுதான் சஹாபாக்களின் உயர்ந்த தகுதியாகும். அவர்கள் முன்னேறி முன்னேறி உச்ச நிலையை அடைந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: முன்னேற்றம் படிப்படியாக நடக்கிறது. எனவே சஹாபாக்களின் முன்னேற்றமும் படிப்படியாகவே நடந்தது. ஹஸ்ரத் நபிகள்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

## திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான். [16:129]**

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**
**ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்தத்(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர் -களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். [22:40]

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சத்ர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குபடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 19 April 2018 Issue No. 16

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(14-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

நாயகம் (ஸல்) அவர்கள், சஹாபாக்கள் முழுமையாக முன்னேற்றத்தை அடைய வேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால், உச்ச நிலையை அடைவதற்கு ஒரு நேரம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதனை படிப்படியாகவே அடைய முடியும். பிறகு சஹாபாக்கள் எதனை பெற்றுக் கொண்டனரோ அதனை உலகம் ஒருபோதும் பெறவில்லை. அவர்கள் பார்த்ததை உலகில் எவரும் பார்க்கவில்லை. (மல்.்.பூஸாத் தொகுதி 2 பக்கம் 52; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் சஹாபாக்களைப் பற்றி கூறினார்கள்: கண்ணியத்திற்குரிய சஹாபாக்களின் காலத்தைப் பார்த்தால் அவர்கள் மிகவும் எளிமையாகவும் சாதாரணமாகவும் இருந்தனர் என்று தெரிய வருகின்றது. ஒரு பாத்திரம் ஈயம் பூசப்பட்டு சுத்தமாக இருப்பது போன்று அவர்களின் உள்ளம் இருந்தது. அது இறை வார்த்தையினால் ஒளி பெற்று மன எழுச்சிகளிலிருந்து முற்றிலும் தூய்மையாக இருந்தது. قَدْ اَفْلَحَ مَنْ زَكّٰهَا என்பதை உண்மைப்படுத்துபவர்களாக அவர்கள் இருந்தார்கள். (மல்.்.பூஸாத் தொகுதி 6 பக்கம் 15; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: சஹாபாக்கள் எந்த அளவுக்கு உண்மையைக் காட்டினார்கள் எனில் அவர்கள் சிலை வணக்கம் மற்றும் படைப்பின வணக்கம் ஆகியவற்றிலிருந்து முகம் திருப்பியது மட்டுமல்லாமல் அதாவது மக்களிடம் கேட்பது, மக்களை புகழ்ந்து பேசுவது இவற்றிலிருந்து முகம் திருப்பியது மட்டுமல்லாமல் அவர்களின் உள்ளத்தில் இருந்து உலகத்தின் தேட்டமே அழிக்கப்பட்டு விட்டது. அவர்கள் இறைவனை பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். மிகவும் சுறுசுறுப்பாக இறை வழியில் தம்மை அர்ப்பணித்து விட்டார்கள். இதனால் அவர்களில் ஒவ்வொருவரும் இப்ராஹீம் ஆக இருந்தார்கள். (மல்.்.பூஸாத் தொகுதி 6 பக்கம் 137; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஓர் உடலைப் போன்று இருந்தார்கள் என்றால் கண்ணியமிக்க சஹாபாக்கள் அதன் உறுப்புகளாக இருந்தனர். (மல்.்.பூஸாத் தொகுதி 6 பக்கம் 279; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ் நமக்கு சரியான முறையில் சஹாபாக்களின் அந்தஸ்தை புரிவதற்கு வாய்ப்பு தருவானாக. அவர்களின் முன்மாதிரி படி நடந்து நமது களங்கமின்மை மற்றும் பற்றையும் கூட அதிகமாக்குவதற்கான வாய்ப்பினை வழங்கவானாக.

★ ★ ★ ★ ★

## பத்ர் பத்திரிகை வாசகர்களுக்கு ஒரு முக்கிய தகவல்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லா -ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் அனுமதியுடன் பத்ர் பத்திரிகையின் ஆண்டுச் சந்தா அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விகிதாச்சார அடிப்படையில் ஆண்டுச் சந்தா 500 ரூபாயாக நியமிக்கப்படுகின்றது. அது 2018 ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வந்து விடும். தாள், பிரிண்டிங் செலவுகள், தபால் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் அதிகரித்திருப்பதன் காரணமாக இந்த அறிவிப்பு நடைமுறைக்கு வருகிறது. வாசகர்கள் இதற்கேற்ப தமது ஆண்டுச் சந்தாவை அதிகரித்து 500 ரூபாயாக வழங்க வேண்டும் என்று தகவல் தரப்படுகிறது. பத்ர் பத்திரிகையின் பிரதிநிதிகளும் இதனை கருத்தில் கொள்ளவும்.

(மேனேஜர், பத்ர் வாரப் பத்திரிகை காதியான்)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

கொண்டிருப்பது லஃப்டனட் கவர்னரின் கடமையாக இருக்கின்றது என்று குறிப்பிட்டு தனது மனநிறைவை அது வெளிப்படுத்தியிருக்கின்றது. எனவே, மேற்கண்ட பத்திரிகையும் கூட முன்னறிவிப்பு நிறைவேறி விட்டதற்கு ஒரு சாட்சியாக இருக்கின்றது.

பிறகு, இறுதியில் இந்த முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது என்பதற்கு இன்னொரு வலுவான ஆதாரத்தையும் தாம் எழுதுகின்றோம். அது இதுவாகும்: அதாவது, ஐம்பது வருடங்கள் வரை அரசாங்கத்தின் ஒரு தனிச்சிறப்புமிக்க பதிவியில் இருந்து வந்த ஓர் ஆங்கில அதிகாரி லாஹூரிலிருந்து வெளி வருகின்ற 'சிவில் என்ட் மில்டரி கஸட்' பத்திரிகையில் **24** ஆகஸ்ட் **1906** -ல் எழுதியுள்ள ஒரு நீண்ட கடிதத்தில் சர் ஃபிலர் அவர்களின் ராஜினாமா முற்றிலும் பெங்காளி பாபுக்களின் விருப்பத்திற்கு ஏற்பவே இருந்தது என்பதை குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதியுள்ளார். ஃபிலர் அவர்களது வழித்தோன்றலின் இந்த கட்டளை உயர் அதிகாரிகளிட -மிருந்து) கிடைத்திருக்கின்றது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தீங்கு விளைவிக்கின்ற பாபுக்களுடன் அவர்களது உள்ளங்களை மகிழ்விக்கின்ற வழிமுறையைக் கடைபிடிக்க வேண்டும் என்ற கட்டளையை அவர் ஏற்றுக் கொண்டார்.

இப்போது பாருங்கள்! எவ்வளவு தெளிவாக இந்த முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது. இறைவன் தனது புத்தம் புது அடையாளங்களைக் காட்டிக் கொண்டேயிருக்கின்றான். அந்தோ! இவை எத்தகைய கவனமற்ற உள்ளங்களாக இருக்கின்றன ? பிறகும் கூட அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. தொடர்ந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த அடையாளங்களின் காரணமாக கடல் நீரால் நிறைந்திருப்பது போன்று நாம் நிச்சய உறுதியால் நிரம்பி விட்டோம். ஆனால் வருத்தம் என்னவென்றால், நமது எதிரிகளின் பாக்கியத்தில் இந்த தெளிவான நீரின் ஒரு துளி கூட கிடைக்காமல் போய் விட்டது. இந்த துர்பாக்கியத்தை கணித்துப் பார்க்க முடியாது.

எனது அடையாளங்கள் தோன்றாத எந்தவொரு சமுதாயமும் இல்லை. எனது அடையாளங்களுக்கு சாட்சிகளாக இல்லாத எந்தவொரு பிரிவும் இல்லை. இந்த அடையாளங்களுக்கு சாட்சியாக இருப்பவர்கள் பத்து கோடி பேர் ஆவர் என்று கூறினாலும் கூட எவ்வகையிலும் அது மிகைப்படுத்திக் கூறப்பட்டதல்ல. ஆனால், எதிரிகளின் நிலைமையின் மீது அழுகை வருகின்றது. அவர்கள் அவற்றிலிருந்து சிறிதளவு கூட பயனடையவில்லை. அவர்களுக்கு காட்டப்பட்ட அந்த அடையாளங்கள் மர்யமின் மகனை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காலத்தில் யூதர்களுக்கு காட்டப்பட்டிருந்தால் அவர்கள் ضُرِبَتْ عَلَيْهِمُ الذِّلَّةُ (அவர்கள் நிலையாக நிரந்தரமான இழிவிற்கு ஆளாகினர்) என்பதை மெய்பிப்பவர்களாக இருந்திருக்க மாட்டார்கள். லூத்தின் சமுதாயம் இந்த அடையாளங்களை பார்த்திருந்தால் ஒரு பெரும் பூகம்பம் மூலம் அது பூமிக்குக் கீழ் அமுக்கப்பட்டிருக்காது. ஆனால், கற்களை விடவும் மிகவும் கடினமானதாக நிரூபணமாகியுள்ள அந்த உள்ளங்கள் மீது பரிதாபமே! எல்லா இருள்களை விடவும் அதிகமாக அவர்களது உள்ளங்களின் இருள் அதிகமாகி விட்டது. அசல் விஷயம் என்னவென்றால், எவ்வாறு காலமானது ஒவ்வோர் உலகப் பொருள்களிலும் முன்னேறியிருக்கின்றதோ அவ்வாறே மறுப்பதிலும் நம்பிக்கையின்மையிலும் கூட அது முன்னேறி இருக்கின்றது. எனவே, முன்னேறியுள்ள இந்த மறுப்பானது அவர்கள் மீது ஏதாவதோர் சாதாரண தண்டனை இறங்குவதை விரும்பவில்லை. மாறாக, உலகம் ஆரம்பமான நாளிலிருந்து இன்று வரை ஒருபோதும் இறங்காத தண்டனை அவர்கள் மீது இறங்குவதையே அது விரும்புகின்றது. எந்நிலையிலும் நாம் இறைவனுக்கு ஆயிரமாயிரம் நன்றிகளை தெரிவிக்கின்றோம். அதாவது எந்த ஒளியை எதிரிகள் ஏற்றுக் கொள்ளவில்லையோ அதனால் மேலும் குருடர்களாகவே இருந்தனரோ, அதே ஒளி நமது அகப்பார்வை மற்றும் இறைஞானம் அதிகரிப்பதற்குக் காரணமாக ஆகி விட்டது.

**(ஹகீகத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 309)**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad